*நாம் சந்திக்கும் வரை!*

*இப்போது நம் கண்களை மூடி நம் கரங்களை உயர்த்துவோம்.*

*... நாம் சந்திக்கும் வரை!*

*இயேசுவின் பாதத்தில் நாம் சந்திக்கும் வரை!*

# ஒரு வழக்கு விசாரணை

## A TRIAL

64-0405

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், ஏப்ரல் 5, 1964

4-H கிளப் கொட்டகை, லூயிவில், மிசிசிப்பி, அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

## செய்தி: 64-0405 - **ஒரு வழக்கு விசாரணை**

எங்கள் பரலோகப் பிதாவே, இன்று மதியம் மீண்டும் இந்த மேற்கூரையின் கீழ் கூடிவருவதற்கும், தேவனுடைய வார்த்தையைக் கேட்பதற்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் காண்பதற்கும் எங்களுக்குக் கிடைத்த இந்தச் சிலாக்கியத்திற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் இருக்கிறோம், பிதாவே.

இன்று மதியம் நீர் எங்களை ஏற்றுக்கொள்வீராக, உம்மைத் தொழுதுகொள்ள நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை மதிப்பீராக என்றும் ஜெபிக்கிறோம். இங்குள்ள ஒவ்வொரு ஆத்துமாவையும் ஆசீர்வதியும். நல்ல



*ஓ, நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!*

*நாம் மீண்டும் சந்திக்கும் வரை தேவன் உங்களோடு இருப்பாராக!*

*183* இப்போது முடிப்பதற்கு முன்பு, உங்களுக்கு அருகில் இருப்பவருடன் கைகுலுக்கி, "தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, கிறிஸ்தவ நண்பரே," என்று சொல்லுங்கள். நகர வேண்டாம். அங்கேயே இருங்கள், சுற்றிலும் கைகுலுக்கிக் கொள்ளுங்கள். "தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, கிறிஸ்தவ நண்பரே." தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரரே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரரே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ராய்.

*184* இப்போது கிறிஸ்துவுக்கு நேராக நம் கரங்களை உயர்த்திப் பாடுவோம்.

சியுங்கள், அவர்-அவர் சொன்னார், "அவர்கள் சொஸ்தமாவார்கள்! அவர்கள் சொஸ்தமாவார்கள்!" என்று. அதைத்தான் சாட்சி சொன்னது, இன்று ஒவ்வொரு சாட்சியும். வேதாகமம் முழுவதும், அவர்... ஏதோ ஒன்று உடனடியாக நடக்கும் என்று அவர் சொல்லாத வரை. ஆனால் இந்த வழக்கில், "அவர்கள் சொஸ்தமாவார்கள்," அதுதான் கைகளை வைப்பது. இப்போது ஒரு தரிசனம் தோன்றி, "குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட நேரத்தில் இது நடக்கப் போகிறது," என்று சொன்னால், அவர் நேரத்தைக் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த வழக்கில், "அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று அவர் சொன்னார். உங்கள் முழு இருதயத்தோடும், அதை விசுவாசியுங்கள். நாம் ஒரு முறை பாடுவோம்.

*நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!*

*இயேசுவின் பாதத்தில் நாம் சந்திக்கும் வரை;*



காரியங்கள் கிடைப்பதற்கு அரிதானவை என்பதை நாங்கள் உணர்கிறோம்.

எனவே நாங்கள் ஜெபிப்பது என்னவென்றால், அவர்களின் தியாகத்தின் நிமித்தம், இன்று மதியம் சுகமடையாமல் யாரும் விடுபடக் கூடாது என்பதே. இழந்துபோனவர்களை இரட்சியும், உமக்கே மகிமையை எடுத்துக் கொள்ளும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாங்கள் கேட்கிறோம். ஆமென். நீங்கள் அமரலாம்.

*2* எங்கள் தகரக் கூரை நீங்கள் கேட்பதைச் சற்று கடினமாக்குகிறது. நாங்கள் உங்களிடம் பேசுவதற்குச் சிறிது நேரம் மட்டுமே எடுத்துக்கொள்வோம். அதன்பிறகு நாங்கள் நேரடியாக ஜெப வரிசைக்குச் செல்வோம், ஏனென்றால் இன்று மதியம் சுகவீனர்களுக்காக ஜெபிப்பதற்கே நாம் ஒதுக்கியிருக்கிறோம்.

*3* இப்போது நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குழுவை விட வேறு எந்த ஒரு மக்கள் குழுவுடனும் இருப்பதில்

நான் எப்போது அதிக மகிழ்ச்சி அடைந்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் மிகவும் அருமையாக இருந்திருக்கிறீர்கள்.

நான் சற்று நேரத்திற்கு முன்பு சகோதரர் ஜான்சனிடம் சொல்லிக்கொண்டிருந்தேன், ஒரு கூட்டத்தை இதைவிடச் சிறப்பாக நான் எப்போது அனுபவித்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. உங்கள் மத்தியில் அத்தகைய ஒரு அற்புதமான ஆவி, நம்பிக்கை, விசுவாசம் இருக்கிறது.

நான் இங்கே சுமார் ஒரு மாதம் தங்க விரும்புகிறேன், அப்போது தான் நாம் ஒருவருக்கொருவர் நன்றாக அறிமுகமாகிக் கொள்ள முடியும். வழக்கமாக, நீங்கள் அறிமுகமாகும் நேரத்தில்தான், "விடை பெறுகிறேன்" என்று சொல்லிவிட்டு எங்காவது செல்ல வேண்டிய நேரம் வந்துவிடுகிறது.

*4* வெளியே அந்த மழையில், தலைக் கவசம் இல்லாமல் நின்று, போக்கு வரத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் அந்தச் சிறிய



அவருக்குத் துதியையும் மகிமையையும் செலுத்துகிறோம்.

*181* மேலும் அன்பான கிறிஸ்தவ நண்பர்களே, அவர்கள் இன்னும் சில நிமிடங்களில் கூட்டத்தை முடிப்பார்கள் என்று எனக்குத் தெரியும், நான் இதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நதியின் இந்தப் பக்கத்தில் நான் உங்களை மீண்டும் சந்திக்கவில்லை என்றால், அதே சுவிசேஷத்துடன், அதே காரியத்துடன் நான் உங்களை அங்கே சந்திப்பேன். இப்போது நினைவில் கொள்ளுங்கள், இன்று மதியம் நீங்கள் ஏற்றுக்கொண்டதில், உங்கள் மனமே உங்களுக்கு ஜூரியாக (நடுவர்) இருந்தது. அது தன் மனதை முடிவு செய்துவிட்டது, தீர்ப்பை வழங்கிவிட்டது.

*182* இப்போது நீங்கள் தொடர்ந்து நடந்துகொள்ளுங்கள், நீங்கள் முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டு அசைய முடியா மல் இருந்தாலும் நான் கவலைப்பட மாட்டேன், தொடர்ந்து அதை விசுவா

சகோதரர்களே, நீங்கள் என்னை நினைவில் கொள்ளுங்கள், இன்றிலிருந்து சில வாரங்களில், இங்கே ஒரு பெரிய காரியம் நடந்ததை நீங்கள் கண்டுகொள்வீர்கள். அவர்கள் சுகமடைவார்கள். அவர்களில் தொண்ணூறு சதவீதம் பேர் சுகமடைவார்கள் என்று நான் சொல்கிறேன். அது சரி. ஓ, நான் அது... அத்தகைய ஒரு விசுவாசத்தின் வடிவத்தை நான் ஒருபோதும் உணர்ந்த தில்லை. அது உண்மையில் அற்புதமாக இருந்தது. நீங்கள்... இப்போது அது எல்லாம் முடிந்துவிட்டது என்பதைப் போல நடந்துகொள்ளுங்கள், தொடர்ந்து செயல் படுங்கள், நீங்கள் அதை உணரவில்லை என்றாலும் பரவாயில்லை. வேண்டாம் . . . "நீங்கள் அதை உணர்ந்தீர்களா?" என்று அவர் ஒருபோதும் சொல்லவில்லை. "நீங்கள் அதை விசுவாசித்தீர்களா? நீங்கள் அதை விசுவாசித் தீர்களா?" என்று அவர் கேட்டார். நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். அவர் இப்போது இங்கே இருக்கிறார், அவர் செய்த அனைத்திற்கும் நாங்கள் அவருக்கு-நாங்கள்



காவலர் யார் என்று எனக்குத் தெரிய வில்லை. அவரை யாருக்காவது தெரிந்தால், எனக்காக அவருக்குத் தனிப்பட்ட முறையில் நன்றி சொல்லுங்கள், சொல்வீர்களா? நான் உங்களுக்குச் சொல்கிறேன், அவர் மிகச் சிறந்த வேலையைச் செய்திருக்கிறார்.

*5* இங்கே வந்து இந்த இடத்தை சுத்தம் செய்து, இந்தக் கூட்டம் இன்று இங்கே நடைபெறும்படி இதைச் சரிசெய்த அந்த மனிதருக்கு நான் நன்றி சொல்ல விரும்பு கிறேன். நான் உங்களுக்குச் சொல்கிறேன், அதைச் செய்யும் அந்தத் தைரியமுள்ள மனிதர்களுக்கு இந்தச் சமூகம் மிகப்பெரிய மரியாதையைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு நாளில் வெளியே வந்த மக்களாகிய உங்களுக்கு நான் மிகப்பெரிய மரியாதையைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரும்பாலான மக்கள் வீட்டிலேயே தங்கியிருப்பார்கள். நான் உங்கள் தைரியத்தைப் பாராட்டுகிறேன். இந்த

எல்லாக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் இங்கே நின்று, இந்த மேற்கூரையின் கீழ் அமர்ந்து, என்ன நடக்கிறது என்பதைத் தெளிவாகக் கேட்க முடியாத போதிலும், எப்படியும் இங்கேயே இருக்கத் தீர்மானித்திருக்கிறீர்கள். அதுதான், அதுதான் தைரியம். எனக்கு அது பிடித்திருக்கிறது. அந்தப் பாடலை நான் எப்போதும் நினைத்துப் பார்க்கிறேன்:

*மலர்களினாலான சுகமான படுக்கையில்*

*நான் பரலோகம் கொண்டு செல்லப்பட வேண்டுமா,*

*மற்றவர்கள் பரிசை வெல்லப் போராடி,*

*இரத்தம் தோய்ந்த கடல்களில் பயணிக்கும் வேளையில்? (ஆம், கடினமானது!)*

***6*** நான், வெகு காலத்திற்கு முன்பு அல்ல, தென் ஆப்பிரிக்காவில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன், பருவமழைக் காலத்தில் மழை மிக வேகமாகப் பெய்து கொண்டிருந்தது, பெண்கள் எல்லா இடங்களிலும்



இருக்கிறார்கள்; இப்போது, இந்தக் கைக்குட்டைகளுக்காக நாம் ஜெபிப்போம்.

*179* பரலோகப் பிதாவே, நாங்கள் வேதாகமத்தில் போதிக்கப்பட்டிருக்கிறோம், அதாவது-அதாவது, "அவர்கள் புனித பவுலின் சரீரத்திலிருந்து, கைக்குட்டைகளையும் கச்சை களையும் கொண்டு வந்தார்கள்." நாங்கள் புனித பவுல் அல்ல, ஆனால் நீர் இன்னும் இயேசுவாகவே இருக்கிறீர். தேவனே, இந்தக் கைக்குட்டைகளுடன் உம்முடைய ஆசீர்வா தங்களை அனுப்பி, அவர்கள் ஒவ்வொரு வரையும் சுகமாக்கும்படி நாங்கள் ஜெபிக் கிறோம். ஆண்டவரே, உம்முடைய மகி மைக்காக அவர்களை நலமாக்கும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நாங்கள் ஜெபித்து இவற்றை அனுப்புகிறோம். ஆமென்.

*180* நான் இதைச் சொல்ல விரும்பு கிறேன். வரிசையில் வரும்போது, பெண்களும் ஆண்களும் குழந்தைகளை வைத்திருப்பதையும், அவர்கள் நனைந்திருப் பதையும் நான் பார்த்தேன். என் போதகர்

நாங்கள் உம்முடைய கட்டளைகளைப் பின்பற்றுகிறோம். ஆமென்.

*176* இப்போது ஜெப வரிசை தொடங்கட்டும். சகோதரர் பார்டர்ஸ், அந்த இடத்தை எடுத்துக்கொள்ளுங்கள். [ஒலி நாடாவில் காலியிடம்]... விசுவாசிக்கிறார்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*177* சகோதர ஊழியர்களாகிய உங்களுடன் நான் என் கைகளை இணைத்துக் கொண்டதற்குக் காரணம், உங்களில் சிலரும் பாதிக்கப்பட்டிருந்தீர்கள், உங்களுக்குத் தெரியும், மற்றவர்களுக்காக ஜெபிப்பதற்கு, உங்களை நீங்களே இங்கே அர்ப்பணித்தீர்கள், அதை விடுங்கள்; அது சரியல்ல. நாம் நம் கைகளை ஒன்றாக இணைத்தபோது, தேவன் அதைக் கனப்படுத்தினார் என்று நான் நம்புகிறேன்.

*178* மேலும் இங்கே, இப்போது, இங்கே- இங்கே கூட்டத்திற்கு வர முடியாதவர்கள்



அமர்ந்திருந்தார்கள், நாள் முழுவதும் மழையில் அமர்ந்திருந்ததால் அவர்கள் தலைமுடி தொங்கிக்கொண்டிருந்தது. என் வாழ்நாளில் சுகமளிக்கும் அத்தகைய ஒரு கூட்டத்தை நான் கண்டதே இல்லை!

7 மெக்சிகோவில், வெகு காலத்திற்கு முன்பு அல்ல, நான் அங்கே நின்று பிரசங்கித்துக் கொண்டிருந்தது நினைவிருக்கிறது, அப்போது இதுபோலவே மழை பெய்து கொண்டிருந்தது, அங்கே அந்தக் காளைச் சண்டை அரங்கில் (bull ring), நாள் முழுவதும். அந்த மக்கள் அன்று காலை ஒன்பது மணிக்கே அங்கே வந்து, மழையில் அமர்ந்திருந்தார்கள்.

ஒரு பெண் தன் கைகளில் ஒரு இறந்த குழந்தையை வைத்திருந்தாள். அந்தக் குழந்தை முந்தின நாள் இரவே இறந்துவிட்டது, அந்தச் சிறுகுழந்தை அவள் கைகளில் விறைத்துப் போய் கிடந்தது. ஜெப அட்டைகளை (prayer cards) ஒரு நபர் விநியோகித்தார், எல்லாவற்றையும் கொடுத்து

முடித்துவிட்டார். இனி ஜெப அட்டைகள் எதுவும் இல்லை.

அவர்கள் என்னை ஒரு கயிற்றின் மூலம், அரங்கத்திற்குப் பின்புறமாக இறக்கி விட்டார்கள், இப்படித்தான் நான் அரங்கத்திற்குள் செல்ல வேண்டும். பில்லி என்னிடம் ஓடி வந்தான். அவன் சொன்னான், "அப்பா, நான் என்ன செய்யப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை." அவன் சொன்னான், "என்னிடம் முந்நூறு உதவியாளர்கள் (ushers) அங்கே நிற்கிறார்கள்."

*8* மேலும் ஜாக் மூரை எத்தனை பேருக்குத் தெரியும்? இங்கே உங்கள் அனைவருக்கும் ஜாக் மூரைத் தெரியும் என்று நான் ஊகிக்கிறேன். அவர் என்னுடனே இருந்தார்.

*9* "அங்கே வெளியே ஒரு சிறிய பெண் இருக்கிறாள்," என்று அவர் கூறினார், "அவளிடம் இறந்த ஒரு குழந்தை இருக்கிறது, இன்று காலை இறந்துவிட்டது." அது அந்த இரவு சுமார் ஒன்பது மணி



தர்கள் மேல், இன்று மதியம் இந்த மழையில் இங்கே அமர்ந்திருக்கும் ஏழை வியாதிஸ்தர்கள் மேல் நாங்கள் எங்கள் கைகளை வைக்கும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் சுகமடைந்து, வீட்டிற்குச் சென்று நலமாக இருப்பார்களாக. ஆபிரகாமைப் போல, "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைப்பார்களாக," ஏனென்றால் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். "அவர்கள் வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்," என்று சொன்னவர் நீரே. அவர்கள் அப்போதே சொஸ்தமாவார்கள் என்று நீர் ஒருபோதும் சொல்லவில்லை, ஆனால் அவர்கள் சொஸ்தமாவார்கள் என்று நீர் சொன்னீர். அதை நாங்கள் நம்புகிறோம், ஆண்டவரே. கூட்டத்தை உம்முடைய கரத்தில் நாங்கள் ஒப்புக்கொடுக்கும்போது, ஒவ்வொருவரும்-எல்லோரும் அதை விசுவாசிக்க, ஆண்டவரே, உதவும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்,

போலவும் உங்களுக்கும் அதே உரிமை இருக்கிறது.

*174* பரலோகப் பிதாவே, என் இருதயத்தில் நான் உமக்கு மீண்டும் நன்றி செலுத்துகிறேன், மேலும் இங்கிருக்கும் இருதயங்களையும் நான் அறிவேன், இதை வார்த்தையில் வைப்பதில் நீர் நீதிபரராக இருக்கிறீர், ஏனென்றால் அது கிரியை செய்வதை நாங்கள் பார்த்திருக்கிறோம், அது சத்தியம் என்று நாங்கள் அறிவோம். ஒவ்வொரு நபரிலும் அது கிரியை செய்யும் என்று நாங்கள் அறிவோம். இப்போது நாங்கள் உம்மிடம் ஜெபிக்கிறோம், ஆண்டவரே, நீர் இங்கே இருக்கிறீர் என்பதை நாங்கள் அறிந்திருக்கும் வேளையில், எங்கள் சொந்த ஆத்துமாவை ஆயத்தப்படுத்துகிறோம். நீர் பதிலளித்தீர். நீர் உம்முடைய வார்த்தையை எங்களுக்கு வெளிப்படுத்தினீர். நீர் இங்கே இருக்கிறீர்.

*175* இப்போது நீர் எங்களை அபிஷேகம் செய்வீராக, ஆண்டவரே, இந்த வியாதிஸ்



இருக்கும். அன்று காலை ஒரு மருத்துவரின் அலுவலகத்தில் இறந்துவிட்டது.

மேலும் அவர் சொன்னார், "அந்த இறந்த குழந் தையை வரிசைக்குள் கொண்டுவர அவள் விரும்புகிறாள்." அவர் சொன்னார், "என்னிடம் வேறு அட்டைகள் இல்லை, நான் வரிசையை ஒழுங்குபடுத்திவிட்டேன்." அவர் சொன்னார், "எனக்குத் தெரிய வில்லை..." மேலும் மழை அவ்வளவு வேகமாகப் பெய்து கொண்டிருந்தது;

அந்தக் குளிரான மழையில் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள். வெளியே பார்த்தேன், அந்தச் சிறிய மெக்சிகன் பெண்கள், அவர்கள் தலைமுடி தொங்கிக் கொண்டு, அந்த விளக்குகளின் வெளிச்சத்தில் முழுவதுமாக நனைந்திருந்தார்கள். மழை அவ்வளவு வேகமாகப் பெய்து கொண்டி ருந்ததால் வெளியே பார்ப்பதே கடினமாக இருந்தது.

சரி, நான் சொன்னேன்... "சரி," அவர் சொன்னார், "என்னால் அவளைத் தடுத்து

நிறுத்த முடியவில்லை," என்றார், "எங்க ளிடம் முந்நூறு உதவியாளர்கள் இருக்கி றார்கள்." என்றார், "அவள் அவர்கள் எல்லார் மீதும் ஏறி வருகிறாள், அவளிடம் அந்த இறந்த குழந்தை இருக்கிறது."

*10* நான் சொன்னேன், "சரி, சகோதரர் மூர், நீங்கள் ஏன் கீழே சென்று அவருக்காக ஜெபிக்கக்கூடாது?" நான் சுமார் பத்து நிமிடங்கள் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன் என்று நினைக்கிறேன். நான் சொன்னேன், "நீங்கள் ஏன் போய் அவருக்காக ஜெபிக்கக் கூடாது," நான் சொன்னேன், "ஏனென்றால் நான் யார் என்றோ, யாரும் அவளுக்குத் தெரியாது; பல பேச்சாளர்கள் இருந்திருக் கிறார்கள்." நான் சொன்னேன், "நான் யார் என்று அவளுக்குத் தெரியாது. நீங்கள் போய் அந்தக் குழந்தைக்காக ஜெபியுங்கள், அது அவளுக்குத் திருப்தியளிக்கும்."

*11* அவர் சொன்னார், "சரி, சகோதரர் பிரான்ஹாம்." அவர் மேடையை விட்டு இறங்கிச் செல்லத் தொடங்கினார்.



*172* இப்போது நாம் ஒரு ஜெபத்தை ஏறெடுக்கும்போது நாம் அனைவரும் நம் தலைகளைத் தாழ்த்துவோம். சகோதரர் பார்டர்ஸ் இங்கே நின்று, பாடல்களை நடத்தி, மக்களை வழிநடத்துவார். நீங்கள் இப்போது கடந்து வரும்போது, ஜெபித்து விசுவாசியுங்கள்.

*173* சகோதர ஊழியர்களே, நீங்கள் அனைவரும் கூடுங்கள். நான் ஏன் இதைச் செய்தேன் என்று உங்களுக்குப் பார்க்கிறீர்கள். நான் கிளம்பிச் செல்லும்போது, சுகமடைகிற இந்த மக்களை, உங்கள் சபை மக்களும் அறிந்துகொள்வார்கள், நீங்களும் தேவனு டைய ஊழியர் தான் என்று. அது ஒருவர் மட்டுமல்ல. தேவனுக்கு ஒரே ஒரு ஊழியர் மட்டும் இல்லை; அவருக்கு ஆயிரக் கணக்கானோர் இருக்கிறார்கள், அதை விசுவாசிக்கிற அனைவரும். நாம் நம் தலை களைத் தாழ்த்துவோம். வியாதிஸ்தர்களுக்காக ஜெபிக்க, என்னைப் போலவே, ராபர்ட்ஸைப் போலவே, அல்லது வேறு யாரைப்

நான் காத்திருக்கிறேன். அப்படியே வெளியே நகர்ந்து ஒரு நீண்ட வரிசையை அமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வெளியேறும்போது, நீங்கள் வந்த வழியே நேராகத் திரும்பிச் செல்லுங்கள்.

*171* நீங்கள் அவரை விசுவாசித்தால், ஏதோ ஒன்று நடக்கப் போகிறது. நினைவில் கொள்ளுங்கள், இப்போது, இந்த ஊழியர்கள் யாரிடமும் எந்த வல்லமையும் இல்லை. என்னிடம் எந்த வல்லமையும் இல்லை. சுகமாக்குவதற்கு, எந்த மனிதரிடமும் எந்த வல்லமையும் இல்லை. ஆனால் இதைச் செய்வதற்கு, தேவனிடமிருந்து எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. எங்களிடம் வல்லமை இல்லை; எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. இதோ எங்கள் அதிகாரம், தேவனுடைய வார்த்தை, மற்றும் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் அவர் இங்கே இருப்பதை நிரூபிக்கிறது. என்ன? நீங்கள் சுகமடைய வேண்டும், ஒவ்வொருவரும்!



*12* மேலும் அங்கே பழைய துணிகளின் குவியல் ஒன்று இருந்தது, அவ்வளவு உயரத்தில், ஓ, அநேகமாக இருபது அல்லது முப்பது கெஜ தூரத்திற்கு. ஒரு குருடர் முந்தின நாள் இரவு தன் பார்வையைப் பெற்றிருந்தார், அதனால் அவர்கள் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். தொண்ணூறு சதவீதம் கத்தோலிக்கர்கள்.

*13* ஆகவே நான் பிரசங்கிக்கத் தொடங்கினேன். நான் சொன்னேன், "நான் சொல்லிக் கொண்டிருந்தது போல, விசுவாசம் என்பது..."

*14* எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்ததை நான் பார்த்தேன், அங்கே ஒரு சிறிய மெக்சிகன் குழந்தை இருந்தது; ஒரு சிறிய கருப்பு முகம், சிறிய ஈறுகள், பற்கள் இல்லை, பளபளக்கிறது, அது போன்ற சிறிய ஈறுகள்.

நான் நினைத்தேன், "அது அந்தக் குழந்தையாகத் தான் இருக்க வேண்டும்." நான் சொன்னேன், "ஒரு நிமிடம் இருங்கள்,

சகோதரர் மூர். குழந்தையை இங்கே கொண்டு வரச் சொல்லி அந்தச் சிறிய பெண்ணிடம் சொல்லுங்கள்."

*15* எனவே அவர்கள் வழியைத் திறந்தார்கள்; ஜெப அட்டை இல்லை. உண்மையில் அவள் உள்ளே வந்திருக்கக் கூடாது, ஆனால் அவள் விடாமுயற்சியுடன் இருந்தாள். அதுதான், அதுதான் உங்களுக்கு வேண்டும். ஆகவே அவள் குழந்தையை மேலே கொண்டு வந்தாள்.

*16* நான் சொன்னேன், "பரலோகப் பிதாவே!" நிச்சயமாக, அவர்கள் ஜெபத்தை மொழிபெயர்க்கவில்லை. நான் சொன்னேன், "இது அந்தக் குழந்தையா இல்லையா என்று எனக்குத் தெரியாது. நான் அந்தச் சிறிய குழந்தையைப் பார்த்தேன்.

ஆனால் இது அதுவாக இருந்தால், இந்தத் தியாகத்தைச் செய்யும் அந்தப் பெண்ணுக்கு நீர் அளிக்கும் மரியாதை இது." நான் அந்தச் சிறிய நீல நிற போர்வையின் மீது என் கைகளை வைத்தேன், அந்தப்



செயல்கள், உங்கள் தீர்ப்பு என்ன என்பதை அறிவிக்கும். நீங்கள் இங்கே உள்ளே வந்து, "சரி, எனக்குத் தெரியவில்லை," என்று சொன்னால், பாருங்கள், நீங்கள் அவரை எங்கே நியாயந்தீர்த்தீர்கள் என்று பார்க்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் அவர் விசாரணையில் இருக்கிறார், அவர் இங்கே உங்கள் முன்னிலையில் இருக்கிறார், அவருடைய வார்த்தை இங்கே இருக்கிறது, அவர் தனது வார்த்தையை மெய்ப்பிக்கிறார். நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், அவர்-அவர் உங்களுக்குத் தான் விசாரணையில் இருக்கிறார், எனக்கு விசாரணையில் இல்லை, நான் அவரை விசுவாசிக்கிறேன், அவர் உங்களுக்குத் தான் விசாரணையில் இருக்கிறார். நீங்கள் அவரை விசுவாசித்தால், அவர் தனது வார்த்தைக்கு உண்மையானவர் என்று நீங்கள் நியாயந்தீர்த்தால்...

*170* இப்போது அவர்கள் வரிசையை நேர்படுத்தப் போகிறார்கள், எனவே அவர்கள் சுற்றி வரிசை அமைக்கிறார்கள், பாருங்கள். இருங்கள், அவர் அதை நேர்படுத்தும் வரை

நீங்கள் விசுவாசித்து உள்ளே வந்தாலொழிய, வராதீர்கள். அது உங்களை இன்னும் மோசமாக்கும். அது உங்கள் விசுவாசத்தைத் தடை செய்யும். ஆனால் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தில் இருக்கிறீர்கள் என்று விசுவாசித்தால், நாங்கள் அவருடைய ஊழியர்கள் அல்ல. நாங்கள் இதைச் செயல்படுத்துகிறோம், சாட்சிகளாக மட்டுமே, நாங்கள் உங்கள் மேல் கைகளை வைக்கும்போது, இது சத்தியம் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் உங்கள் மேல் கைகளை வைக்கும்போது, நீங்கள் அதை நம்பி, "நன்றி, ஆண்டவரே! எல்லாம் முடிந்தது," என்று சொல்லிக்கொண்டு, சந்தோஷத்துடன் இங்கிருந்து வெளியேறுங்கள். நீங்கள் உங்கள் மனதை ஒருபோதும் மாற்றிக்கொள்ளாதீர்கள்.

*169* இப்போது நினைவில் கொள்ளுங்கள். இதை மீண்டும் மேற்கோள் காட்டுகிறேன். நன்றாகக் கவனியுங்கள். இந்த வழக்கில், உங்கள் மனமே உங்கள் ஜூரி (நடுவர்). இங்கிருந்து வெளியேறிய பிறகு உங்கள்



பெண்ணின் கையில் தொங்கிக்கொண்டிருந்த அந்தச் சிறிய விறைப்பான உடல் சுமார் இவ்வளவு நீளம் இருந்தது.

*17* உடனே அந்தக் குழந்தை அலறிக் கொண்டு, உதைக்கத் தொடங்கியது, அதன் உச்சி... அதனால் முடிந்தவரை சத்தமாக அலறியது. அந்தக் குழந்தை... இப்போது அந்தச் சிறிய பெண் கீழே விழுந்து, "பாட்ரே!" என்று சத்தமிடத் தொடங்கினாள். பாட்ரே என்றால் "தந்தை" என்று அர்த்தம், உங்களுக்குத் தெரியும். அவள் கையில் ஜெபமாலை வைத்திருந்தாள்.

நான் சொன்னேன், "அதெல்லாம் தேவையில்லை."

*18* நான் சகோதரர் எஸ்பினோசாவிடம் சொன்னேன், ஒரு பெந்தேகோஸ்தே போதகர். அநேகருக்கு, உங்களில் அநேகருக்கு அவரைத் தெரியும் என்று நான் ஊகிக்கிறேன். ஆம், சகோதரர் எஸ்பினோசா. நான் சொன்னேன், "இப்போது, 'அந்தக் குழந்தை இறந்து விட்டது' என்று நீங்கள் எழுத வேண்டாம்.

எனக்குத் தெரியாது. நான் கண்ட தெல்லாம் அந்தத் தரிசனம் மட்டும்தான்." நான் சொன்னேன், "அந்தப் பெண்ணுக்குப் பின் னால் ஒருவரைப் பின்தொடரச் சொல்லுங்கள், அவளைப் போகவிட்டு, மருத்துவரை அதற்குச் சான்றளித்து ஒரு அறிக்கை கொடுக்கச் சொல்லுங்கள்."

*19* மேலும் கிறிஸ்தவ வர்த்தகர்களின் குரல் (Christian Business Men's Voice) பத்திரிகை சமீபத்தில் அந்த அறிக்கையை வெளியிட்டது, "மருத்துவர் சாட்சி அளித்தார், 'அன்று காலை எட்டே முக்கால் மணிக்கு, தனது அலுவலகத்தில் குழந்தை இரட்டை நிமோனியாவால் இறந்தது.'"

மேலும் அன்று இரவு பத்து மணிக்கு, ஒரு தியாகத்தின் நிமித்தமாக, கர்த்தராகிய இயேசு அதற்கு மீண்டும் உயிரைக் கொடுத்தார். இப்போது, அது மிகவும் உண்மையானது! பரலோகத்திலுள்ள தேவ னுக்கு அது சரி என்று தெரியும். மருத்துவரின் சான்றளிக்கப்பட்ட அறிக்கை!



வரத்தைப் பயன்படுத்திய அந்தப் பெண், அவள் பலவீனமானாள் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டது, அது அவருடைய பெலனாக இருந்தது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? மேலும் நான் ஒரு பாவி. ஆனால் இயேசு சொன்னார், "இவைகளைப்பார்க்கிலும் பெரிய காரியங் களை நீங்கள் செய்வீர்கள், ஏனென்றால் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன்."

*167* இப்போது நாம் ஜெபம் ஏறெடுக்கப் போகிறோம். மேலும் இந்த ஊழியர்கள் என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நானும் இங்கே வெளியே நிற்கப் போகிறேன், வியாதிஸ்தர்கள் ஒவ்வொருவர் மேலும் கைகளை வைக்கப் போகிறேன். மேலும் இப்போது நீங்கள்...

*168* நினைவில் கொள்ளுங்கள்! கேளுங்கள்! இதற்குச் செவிகொடுங்கள்! இதை விசுவாசியுங்கள்! "இப்போதே அது என்றென்றைக்குமாக முடிந்துவிட்டது" என்று

கள், அது சரியல்ல. அந்தக் காட்சியிலிருந்து நான் விலகி இருக்க விரும்புகிறேன்.

*166* நீங்கள் இயேசுவைப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த வாரத்தில், அவர் இங்கே இருக்கிறார் என்பதை உங்களுக்குக் காண்பிக்க நான் என்னால் முடிந்தவரை முயற்சித்திருக்கிறேன். உங்களுக்கு விசுவாசம் இருந்தால், உங்கள் கரங்களை உயர்த்தி அவரைப் பற்றிக் கொள்ளுங்கள், நீங்கள் வரிசையில் வர வேண்டிய அவசியமில்லை. ஆனால் நீங்கள் இந்த வேதவசனத்தைப் பின்பற்ற விரும்பினால், அவருடைய தெய்வீகப் பிரசன்னம், நீங்கள் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டிருக்கிறீர்கள். சற்று முன்பு, இங்கே நின்று கொண்டிருந்த இந்த மக்களைப் பாருங்கள், என் வாழ்நாளில் நான் அவர்களைப் பார்த்ததே இல்லை என்று பரலோகத்திலிருக்கிற தேவனுக்குத் தெரியும். நான் இங்கேயே தொடங்கலாம், சில நிமிடங்களில் நான் மயக்கமடைவேன். அது அவருக்கு சம்பவித்தபோது, தேவனுடைய



அந்த அறிக்கை இப்போது கிறிஸ்தவ வர்த்தகர்களின் கைகளில் உள்ளது, அதற்கு டெமோஸ் ஷகாரியன் சர்வதேச இயக்குனராக இருக்கிறார். மருத்துவரிடம் கையொப்பமிடப் பட்ட அறிக்கை அவரிடம் உள்ளது, "அன்று காலை, குழந்தை இரட்டை நிமோனியாவால் இறந்தது." மேலும் அன்று இரவு பத்து மணிக்கு அந்தக் குழந்தை உயிர்ப்பிக்கப் பட்டது, அதைச் செய்வதில் விடா முயற்சியுடன் இருந்த ஒரு தாயின் விசுவாசத்தினால். அது அப்படி இருக்கிறது.

*20* எலிசாவைப் போய்ப் பார்ப்பதில் அந்தச் சிறிய சூனேம் பெண் எப்படி விடாமுயற்சியுடன் இருந்தாளோ, அது போலவே!

*21* கிரேக்க நாட்டைச் சேர்ந்த அந்த சிரோபேனிசியப் பெண் இயேசுவிடம் செல்ல எப்படி விடாமுயற்சியுடன் இருந்தாளோ, அது போலவே. தனக்கு வலிப்பு நோய் உள்ள ஒரு மகள் இருக்கிறாள் என்பது

அவளுக்குத் தெரியும். இருந்தாலும், அவள் ஒரு யூதராகக் கூட இருக்கவில்லை.

அந்த எழுப்புதல் அவளுடைய மக்களுக்கானது அல்ல. மேலும் பின்னர் அவள் அவரிடம் சென்ற போது, அவர் சொன்னார், "பிள்ளை களின் அப்பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுவது எனக்குத் தகுதியல்ல." அவளை ஒரு நாய் என்று அழைத்தார்.

22 அவள் சொன்னாள், "அது உண்மை தான், ஆண்டவரே." மெய்யான விசுவாசம் வார்த்தையை உண்மை என்று எப்படிச் சாட்சி பகர்கிறது என்று பாருங்கள்! "உண்மைதான், ஆண்டவரே, ஆனால் நாய்கள் எஜமானின் மேஜையின் கீழே விழும் துணிக்கைகளைச் சாப்பிட விரும்புகின்றன."

23 அவர் சொன்னார், "இந்த வார்த்தை யினிமித்தம், உன் பிள்ளை குணமாக்கப் பட்டது." மேலும் அவள் விடாமுயற்சியுடன் இருந்தபடியால், அதே வழியில் அதைப் பெற்றுக்கொண்டாள்.



நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்துச் சாட்சி கொடுக்க இங்கே ஒலிவாங்கியின் அருகில் இருப்பார். சரி.

164 இப்போது கவனியுங்கள். நான் இதைச் செய்வதற்குக் காரணம், நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இங்கே உள்ள இந்தச் சகோதரர்களை எனக்குத் தெரியாது. அவர்களில் இரண்டு அல்லது மூன்று பேரை எனக்குத் தெரியும். அவர்கள் மெத்தடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பிடீரியனாக இருக்கலாம். அவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. நான் அதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. புரிகிறதா? இப்போது, நான் போன பிறகு நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்..

165 பெரும்பாலும், சுவிசேஷகர் பட்டணத்திற்குள் வரும்போது அவரே எல்லாவற்றையும் செய்கிறார், பாருங்கள், அவரே வியாதிஸ்தர்களுக்காக ஜெபிப்பது மற்றும் எல்லாவற்றையும் செய்கிறார். பாருங்

கைக்குத் திரும்பிச் செல்லலாம். இப்போது நான் பேசுவதைக் கேட்க முடிகிறவர்கள் அனைவரும், உங்கள் கையை உயர்த்துங்கள்.

*162* கவனியுங்கள், கடைசியில் இருப்பவர்கள், முதலில் உள்ளே வரட்டும்; மேலும் இந்த வழியாகச் சுற்றி வரட்டும், மேலும் சுற்றிச் செல்லட்டும். பிறகு அடுத்தவர்கள் வரட்டும். இங்கே உள்ள ஊழியர்களுக்குப் பின்பாக நேராகச் சுற்றிச் செல்லுங்கள், உங்களுக்காக ஜெபிக்கப் பட்டதும், நேராகத் திரும்பிச் சென்று உங்கள் இருக்கையில் அமருங்கள். பிறகு பில்லி, உங்களை நேராகச் சுற்றி வரும்படி சைகை காட்டுவான் மற்றும் எப்படி வரிசையில் நிற்பது என்று உங்களுக்குச் சொல்வான். மேலும் இது முடிந்தவுடனே, அவர்களை அந்தப் பக்கம் நிற்க வைத்து, இந்த இன்னொரு வழியாக வரச் செய்வோம்.

*163* இப்போது எல்லோருக்கும் புரிகிறதா, இப்போது உங்கள் கையை உயர்த்துங்கள். சரி, நல்லது. இப்போது சகோதரர் பார்டர்ஸ்



*24* மிக்க நன்றி, நண்பர்களே. கர்த்தர் ஒவ்வொருவரையும், இசைக்கலைஞர்கள், இங்கே உள்ள சகோதரி அங்ரென் மற்றும் எனது நண்பர்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. எனது நண்பர்கள் அநேகர் இந்தக் கூட்டத்திற்காக இங்கே வந்திருப்பதை நான் காண்கிறேன்.

நான் இன்று, சகோதரர் மற்றும் சகோதரி எவன்ஸைப் பார்த்தேன். அவருக்கு நான் பேசுவது கேட்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஜார்ஜியாவிலுள்ள மேக்கனில் இருந்து வந்திருக்கிறார்கள். இங்கே சகோதரி அங்ரென் மற்றும் அவர்கள் அனைவரும் டென்னசியிலுள்ள மெம்பிஸில் இருந்து வந்திருக்கிறார்கள்.

மேலும் சகோதரர் பால்மர் மற்றும் சகோதரி பால்மர், மற்றும் அவர்களின் நண்பர்கள். மேலும் அங்கே என்னுடைய ஒரு போதகர் நண்பரான சகோதரர் பார்னெல். நண்பர்கள், தனிப்பட்ட நண்பர்கள்,

இப்போது இங்கே சுற்றிலும் அமர்ந்திருப்பதை நான் காண்கிறேன். இங்கே சகோதரர் ஜே.டி., ஜார்ஜியாவிலிருந்து, மேலும், அவரது நண்பர்.

நீங்கள் அனைவரும் இங்கே இருப்பதற்கும், உங்கள் விசுவாசம் மற்றும் நம்பிக்கைக்கும் நாங்கள் நிச்சயமாக நன்றியுள்ளவர்களாக இருக்கி றோம். அந்த மக்களில் சிலர், நான் அங்கே பிரசங்கிக்கும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், இந்தியானாவிலுள்ள ஜெஃபர்சன் வில்லிக்கு நீண்ட தூரம் வாகனம் ஓட்டி, கேட்ப தற்காகவே வருகிறார்கள்.

அப்படி யானால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், எனது அபிப்பிராயப்படி, அத்தகைய மக்களுக்கு உலகம் தகுதியானது அல்ல. நான் அப்படி நினைக்கிறேன். இங்கே உள்ள மக்களாகிய நீங்கள், நாம் கிறிஸ்துவின் ஒரு பெரிய அலகாக இருக்கிறோம். நாம் அவரை விசுவாசிக்கிறோம்.



முடியும்? எனக்கு ஒன்றும் தெரியாது. இதற்குச் சாட்சியாக வரப்போகும் போதகர்களைப் பாருங்கள். நேராகக் கீழே செல்லுங்கள், உங்கள் வரிசையை இங்கே இந்த வழியாக அமைத்துக்கொள்ளுங்கள்.

*160* என்ன? [யாரோ சகோதரர் பிரான்ஹாமிடம் சொல்கிறார்கள், "என்னால் அவர்களை நகரச் செய்ய முடியவில்லை."] என்ன? ["என்னால் இவர்களைக் கீழே நகரச் செய்யக் கூட முடியவில்லை."] அது பரவாயில்லை. அது சரி. நாம் அவர்களை அழைத்து வருவோம்.

*161* இப்போது நான் நிர்வாகியான சகோதரர் பார்டர்ஸை, இந்த ஒலிவாங்கிக்கு (microphone) முன்பாக வரும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர் வரிசையை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன், அப்போதுதான் அவர்கள் இந்த வழியாக வருவார்கள், அந்த வழியாகச் சுற்றித் திரும்புவார்கள், மேலும் நீங்கள் வரும்போது, பாருங்கள், உங்கள் இருக்

*159* பாருங்கள், இங்கே எத்தனை போதகர்கள் இருக்கிறீர்கள், விசுவாசிக் கிறவர்கள், இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்று விசுவாசிக்கிற உண்மையான தேவ பயமுள்ள மனிதர்கள், மேலும் அவருடைய சபைக்கு அவருடைய கடைசி ஆணையானது, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையா ளங்களாவன; அவர்கள் வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்பதாகும்? உங்களில் எத்தனை போதகர்கள் அதை விசுவாசிக்கிறீர்கள்? நீங்கள் விசுவாசித்தால், இங்கே வந்து நாம் ஜெபிக்கும்போது என்னுடன் இங்கே நில்லுங்கள். அப்போது தான் இந்த மக்கள் சுகமடையும்போது, அது சகோதரர் பிரான்ஹாம் மட்டுமல்ல; நீங்களும் தான் என்பதை அவர்கள் பார்ப்பார்கள். வரிசை கடந்து செல்லும் இடத்தில், இங்கே ஒரு இரட்டை வரிசையை அமைத்துக் கொண்டு, இங்கே வந்து நில்லுங்கள். ஓ, என் தேவனே! தேவன் வேறு என்ன செய்ய



*25* மேலும் இப்போது நான் வார்த்தையை வாசிக்கவும் சில கருத்துக்களைச் சொல்லவும் சில நிமிடங்கள் எடுத்துக்கொண்டால் ஒழிய இது ஒரு கூட்டமாக இருக்காது. ஏனென்றால், நீங்கள் அவ்வளவு நேரம் இங்கே அமர்ந்திருக்கும் அளவுக்கு உண்மை யுள்ளவர்களாக இருந்தால், அதற்கு உண்மையாக இருக்கும் பொருட்டு, நான் வேத வசனத்தை வாசித்து ஒரிரு கருத்துக் களைச் சொல்லி, பின்னர் நாம் ஜெப வரிசையைத் தொடங்குவோம்.

*26* இப்போது இதிலிருந்து ஒரு சூழலை வரைவதற்காக, மாற்கு 16-ம் அதிகாரத் திலிருந்து, வேதவசனத்தை இன்று சில நிமிடங்களுக்கு நான் வாசிக்கப் போகிறேன். நான் 14-வது வசனத்திலிருந்து தொடங்கப் போகிறேன்.

**பின்பு அவர் அவர்களை கடிந்து கொண்டார், பதினொருவரும்... பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கையில் அவர்களுக்குத் தரிசனமாகி, தாம் உயிர்த்தெழுந்தபின் தம்மைக்**

**கண்டவர்களை அவர்கள் நம்பாததினால், அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதயக் கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்.**

**... அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றார்.**

*27 இப்போது நினைவில் கொள்ளுங்கள், "உலகமெங்கும், இந்த சுவிசேஷம், சர்வ சிருஷ்டிக்கும்." இது அப்போஸ்தலர்களுடன் நின்றுவிட்டது என்று சிலர் சொல்கிறார்கள். அவர் இங்கே சொன்னார், சபைக்கு அவரது கடைசி ஆணையானது, "உலகமெங்கும், சர்வ சிருஷ்டிக்கும்.*

*மேலும் விசுவாசிக்கிற வர்களால் நடக்கும் அடையாளங்களாவன." எங்கே? "உலகமெங்கும், சர்வ சிருஷ்டிக்கும்." கவனியுங்கள், அங்கேதான் அவர் அதைச் சபைக்குக் கொடுக்கிறார்; அவர் அதை எங்கே திரும்ப எடுத்துக்கொண்டார் என்று எனக்குக் காட்டுங்கள். ம்-ஹூம். "உலகமெங்கும்!"*



*155 அங்கே மேலே இருப்பவர்கள், ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், முன் பக்கமாகக் கீழே நடந்து வாருங்கள்.*

*156 இங்கே இந்த வரிசையில் இருப்பவர்கள், ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், அந்தப் பக்கத்தில் போய் நில்லுங்கள். இந்தப் பக்கத்தில் ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், இங்கே இந்த வரிசையில் போய் நில்லுங்கள். இங்கே, ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், இந்த வரிசையில் போய் நில்லுங்கள்.*

*157 இப்போது, அங்கேயே நில்லுங்கள். நாம் மற்ற பக்கத்தை இன்னும் ஒரு நிமிடத்தில் அழைப்போம். உங்கள் வரிசையை அமைத்துக்கொள்ளுங்கள். நேராகக் கீழே வாருங்கள். நான்...*

*158 இப்போது அசையாமல் நில்லுங்கள், ஒரு நிமிடம், நீங்கள் இருக்கும் இடத்திலேயே. நீங்கள் இருக்கும் இடத்திலேயே நில்லுங்கள், ஒரு கணம்.*

*நீர்களா? அவருடைய வார்த்தை சத்தியம் என்று நம்புகிறீர்களா? அவர் வாக்குத்தத்தம் பண்ணினார்! வாரம் முழுவதும், நான் அதைப் பற்றிப் பிரசங்கித்திருக்கிறேன், மேலும் இந்நாளில் அவர் இதைச் செய்வார் என்று வேதாகமத்தில் காண்பித்திருக்கிறேன். இது சத்தியம் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நீங்கள் நியாயந்தீர்க்கிறீர்களா? உங்கள் தீர்ப்பு என்ன? நீங்கள் நம்புகிறீர்களா?*

*154 இங்கே இந்தப் பக்கத்தில் ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், இங்கே இடைகழியின் நடுவில் எழுந்து நில்லுங்கள், ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், இங்கே இந்த வரிசையில்; இந்த வழியில், இடைகழியின் நடுவில் எழுந்து நில்லுங்கள். அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள், ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள், அந்த இடைகழியில், இந்த வழியில் எழுந்து நில்லுங்கள். மற்ற பக்கத்திற்கு எதிராக இருப்பவர்கள், அந்த இடைகழியில் எழுந்து நில்லுங்கள்.*



**விசுவாசிப்பவன்... இரட்சிக்கப் படுவான்;... விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். மேலும் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன; என் நாமத்தி னாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;**

**சர்ப்பங்களை எடுப்பார்கள்;... சாவுக்கு ஏதுவான யாதொன்றைக் குடித்தாலும், அது அவர்களைச் சேதப்படுத்தாது, தீங்கிழைக்காது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.**

**இவ்விதமாக... கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.**

**அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கித்தார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து,... நடக்கிற அடையா ளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.**

*28* இப்போது, அந்த வேதவசனம் சத்தியம் என்று நான் நம்புகிறேன்.

*29* நான் அதை மறப்பதற்கு முன்பு, சற்று நேரத்திற்கு முன்பு என் மகன் என்னிடம் சொன்னான், ஆர்க்கன்சாஸைச் சேர்ந்த ஏதோ ஒரு சிறிய பெண்மணி, மற்றும் அவளுடைய கணவர், எனக்காக ஒரு பிறந்தநாள் கேக்கை சுட்டு (baked) எனக்குக் கொடுத்தார்கள். உங்களில் அநேகர் எனக்கு வாழ்த்து அட்டை களையும் பொருட்களையும் கொடுத்திருக் கிறீர்கள்.

அவற்றைப் பார்க்க எனக்கு இன்னும் நேரம் கிடைக்கவில்லை. மிக்க நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. மேலும் உங்களுக்கு ஒரு... நாம் அனைவரும் அங்கே நித்தியமான ஒரு பிறந்தநாளைக் கொண்டாடுவோம் என்று நான் நம்புகிறேன், அங்கே நாம் அமர்வோம், மேலும் நான் விரும்புகிறேன் ஒரு...

நான் உங்கள் ஒவ்வொருவருடனும் பத்தாயிரம் ஆண்டுகள், சும்மா உட்கார்ந்து



என்று உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். என் வாழ்நாளில் அவரைப் பார்த்ததே இல்லை.

*151* இங்கே பித்தப்பை பிரச்சனையுடன் ஒரு பெண்மணி இருக்கிறார். தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று நீங்களும் உங்கள் முழு இருதயத்தோடும் நம்புகி றீர்களா? திருமதி. விட்டேக்கர், தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று உங்கள் முழு இருதயத்தோடும் நம்புகிறீர்களா? அது சரியாக இருந்தால், உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள், நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்களாக இருந்தால்.

*152* அவர் இங்கே இருக்கிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அது என்ன? அது தேவனுடைய தற்காப்பு சாட்சி. அல்லே லூயா! ஓ மக்களே, உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள்! அது தேவனுடைய தற்காப்பு சாட்சி.

*153* நீங்கள் அவரை எப்படி நியாயந் தீர்க்கிறீர்கள்? அவர் சரியென்று நம்புகி

இருக்கிறது. அவருக்கு வலிப்பு நோய் இருக்கிறது, மேலும் அவருக்குப் பெண் சம்மந்தப்பட்ட பிரச்சனை இருக்கிறது. மேலும் அவருடைய பெயர் செல்வி. வுட்ஸ். அது சரியாக இருந்தால், உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள். அது சரியாக இருந்தால் உங்கள் கால்களில் எழுந்து நில்லுங்கள். நான் என் வாழ்நாளில் அந்தப் பெண்மணியைப் பார்த்ததே இல்லை. பிசாசு உங்களை விட்டுப் போய்விட்டான், சகோதரியே. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! "உன்னால் விசுவாசிக்க கூடுமானால்." நீங்கள் சும்மா விசுவாசியுங்கள்.

150 இங்கே பின்னால் ஒரு பெண்மணி அமர்ந்திருக்கிறார். அவர் மிகவும் பலவீனமாக இருக்கிறார். அவர் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார். அவர் இப்போதுதான் மருத்துவமனையிலிருந்து வந்திருக்கிறார். அவருக்கு-அவருக்கு வயிற்றுப் பிரச்சனை இருக்கிறது. அவருடைய பெயர் செல்வி. கிச்சன்ஸ். எழுந்து நில்லுங்கள், இயேசு கிறிஸ்து உங்களைச் சுகமாக்குகிறார்



பேச விரும்புகிறேன். மேலும் நாம் பேசத் தொடங்கியபோது இருந்ததை விட, பேசுவதற்கு நமக்குக் குறைவான நேரம் இருக்காது. அதுதான் சத்தியம். இப்போது நீங்கள் செய்த அனைத்திற்கும் நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

30 இப்போது சுமார் பத்து நிமிடங்களுக்கு, அல்லது அதிகபட்சம் பதினைந்து நிமிடங்களுக்கு, ஒருவேளை, கர்த்தருக்குச் சித்தமானால், சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

31 நான் இதைச் சொல்ல விரும்புகிறேன், நான் வருவதற்கான என் உணர்வு, நடத்துதல்; நான் வருவதற்குப் பொறுப்பேற்க நீங்கள் போதகர்கள் நடத்தப்பட்டதாக உணர்ந்து, அது எனக்கு ஒரு திறந்த வாசலைக் கொடுத்தது; மக்களாகிய நீங்கள் வெளியே வருவதில் உண்மையாக இருந்தீர்கள்;

மேலும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் மணி நேரத்தின் அடையாளத்தில், ஒவ்வொரு முறையும் அவர் நமக்குத் தோன்றி, இயேசு

தோல்வியடையவில்லை என்பதை நிரூபித்தி ருக்கிறார். மேலும் அவருடைய உயிர்த் தெழுதல், முடிவில்லாத, நித்திய இருப்பு, மற்றும் அவருடைய பிரசன்னம், உங்கள் வாழ்நாள் முழுவதிலும் நீங்கள் செய்ததை விட அதிகமாக அவரை நேசிக்கவும் அவருக்குச் சேவை செய்யவும் உங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று நான் நம்புகிறேன், அவருக்கு உண்மையாக வாழவும், நெருக்கமாகவும், சிறப்பாகவும் வாழ உங்கள் இருதயத்தில் தீர்மானிக்கவும்.

*32* தெற்கில் அடிமைகள் இருந்த காலத்தைப் பற்றி, ஒருமுறை என்னிடம் சொல்லப்பட்ட ஒரு கதையை நான் கேட்டேன்.

*33* அடிமைகளின் காலத்தில் செய்தது போல, அவர்கள் அவர்களைச் சந்தைகளில் விற்பது வழக்கம், மற்றும் அதுபோல. அவர்கள், போயர்கள் (Boers), அவர்களை உள்ளே கொண்டு வந்தார்கள், இங்கே



ளுங்கள், அந்தப் பெண்மணி தன் கையை உயர்த்தியிருக்கிறார். உங்கள் கையை உயர்த் துங்கள், எனக்கு உங்களைத் தெரியாது. தேவனே எனக்கு உதவும். திருமதி. பேட்டர்சன். அது சரி. நீங்கள் விசுவாசிக் கிறீர்களா?

*148* அதுமட்டுமல்ல, அங்கே உங்களுக்கு அருகில் அமர்ந்திருப்பது உங்கள் மாமியார். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் தனக்காக ஜெபிக்கப்பட விரும்புகிறார். அவர் அந்த நோக்கத்திற்காகத் தான் வந்திருக்கிறார். அவருக்கு என்ன பிரச்சனை என்று தேவன் என்னிடம் சொல்ல முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அவருடைய பிரச்சனை அவருடைய கண்களிலும் காதுகளிலும் இருக்கிறது. அது சரியாக இருந்தால், உங்கள் கையை உயர்த்துங்கள். அது சரி. அவர் உயிரோடிருக்கிறார்! அவர் இன்னும் தேவனாக இருக்கிறார்.

*149* அங்கே பின்னால் ஒரு பெண்மணி அமர்ந்திருக்கிறார், அவருக்கு வலிப்பு நோய்

அமர்ந்திருக்கிறீர்கள், ஒரு சிறிய வெள்ளை... என்னை நேராகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆம், நீங்கள் தான். ம்-ஹூம். உங்களுக்கு என்னைத் தெரியாது. ஆனால் நீங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள், இல்லையா? நீங்கள் ஏதோ ஒன்றைப் பற்றிச் சற்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள். உங்கள் மார்பில் ஒரு கட்டி இருக்கிறது. அது சரியாக இருந்தால், உங்கள் கையை உயர்த்துங்கள்.

இப்போது, நீங்கள் சொல்கிறீர்கள், "நீங்கள் ஒரு கட்டியைப் பார்த்தீர்கள்." அங்கே எந்தக் கட்டியும் வெளியே தெரியவில்லை.

*147* அது சரிதானே? கட்டி எதுவும் வெளியே தெரியவில்லை. மேலும் எனக்கு உங்களைத் தெரியாது. நீங்கள் யார் என்று தேவன் என்னிடம் சொல்ல முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அது உங்களுக்குச் சிறிது உதவுமா? அது பார்வையாளர்களுக்கு உதவுமா? இப்போது, நினைவில் கொள்



ஜமைக்கா தீவில். பிறகு இங்கே இருந்த மக்கள், அவர்களைக் கடத்தி வந்தார்கள்.

மேலும் அவர்கள் அவர்களை அடிமைகளாக விலைக்கு வாங்கினார்கள், அந்நாட்களில் அது சட்டப்பூர்வமானதாக இருந்தது. மேலும் அவர்கள் சென்று அவர்களை வாங்குவார்கள், அவர்கள் நல்ல பருமனான அடிமைகளைக் கண்டு பிடிப்பார்கள், ஏன், அவர்கள்... அந்தப் பெரிய பருமனான அடிமையை ஒரு பருமனான பெண்ணுடன் இனப்பெருக்கம் செய்வார்கள்;

அது ஒரு சிறந்த மனிதனை உருவாக்கும். விஷயங்களில், அவர்களின் சண்டையிடுவதில், இன்று அவர்கள் உலகின் சாம்பியன்களாக இருப்பதற்கு அதுவே காரணம். கால்நடைகளைப் போலவே, அவர்களும் இனப்பெருக்கம் செய்யப் பட்டார்கள், மற்றும் அதுபோல.

*34* ஆனால் பின்னர் நாம் ஒரு வாங்குபவரைப் பார்க்கிறோம், ஒரு முறை,

சுமார் நூறு அடிமைகள் இருந்த ஒரு தோட்டத்திற்கு ஒரு தரகர் வாங்க வந்தார்.

*35* மேலும் அந்த அடிமைகள், அவர்கள் சோகமாக இருந்தார்கள். அவர்கள் வேலை செய்யும்படி அவர்களைச் சவுக்கால் அடிக்க வேண்டியிருந்தது, ஏனென்றால் அவர்கள் வீட்டிலிருந்து வெகு தொலைவில் இருந் தார்கள். அவர்கள் கடத்தப்பட்டார்கள், சிறைபிடிக்கப்பட்டார்கள், சிறையிருப்பிற்குச் சென்றார்கள் மற்றும் கடத்திச் செல்லப் பட்டார்கள்.

மேலும் அவர்கள் வேலை செய்யும்படி அவர்களைச் சவுக்கால் அடிக்க வேண்டி யிருந்தது, ஏனென்றால் அவர்கள் சோர்ந்து போயிருந்தார்கள்; அவர்கள் வீட்டி லிருந்து வெகு தொலைவில் இருக்கிறார்கள். அவர்கள் இனி ஒருபோதும் அப்பா மற்றும் அம்மாவைப் பார்க்க மாட்டார்கள். அவர்கள் தங்கள் மனைவி அல்லது பிள்ளைகளை ஒருபோதும் பார்க்க மாட்டார்கள். அது ஒரு சோகமான விஷயம்.



*144* இப்போது, நீங்கள், கடைசியில் இருக்கும் சிறிய பெண்மணி, வானிலை மோசமாக இருந்ததால் உங்களுக்கு அது கிடைக்கவில்லை. உங்களுக்குப் பெருங்குடல் பிரச்சனை இருக்கிறது. அல்லது இதயம்... பெருங்குடல் பிரச்சனை, அது உங்கள் பெருங்குடலில் இருக்கிறது. உங்களுக்கு அருகில் அமர்ந்திருக்கும் இந்தப் பெண் மணிக்கு, இதயப் பிரச்சனை இருக்கிறது.

*145* அது சரியாக இருந்தால், நீங்கள் மூன்று பெண்களும் உங்கள் கைகளை உயர்த்துங்கள். மேலும் நான் உங்களுக்கு அந்நியனாக இருக்கிறேன், பாருங்கள். இப்போது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசமாயிருங்கள். நீங்கள் செய்ய வேண்டி யதெல்லாம் அதுதான்.

*146* இங்கே அமர்ந்திருக்கும் ஒரு சிறிய பெண்மணி, என்னை நேராகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், எனக்கு உங்களைத் தெரியாது. நீங்கள் எனக்கு ஒரு அந்நியர். உங்களுக்கு என்னைத் தெரியாது. அங்கே

அங்கே அமர்ந்திருக்கும் அந்தச் சிறிய பெண்மணி, நான் தேவனுடைய ஊழியன் என்று நீங்கள் என்னை நம்புகிறீர்களா? நீங்கள், இங்கே அமர்ந்திருக்கும் அந்தச் சிறிய பெண்மணி. பாருங்கள்? நீங்கள், சரி, உங்களில் இரண்டு பேர் உங்கள் தலையை அசைத்தீர்கள். சரி, அப்படியானால் நாம் உங்கள் இருவரையும் எடுத்துக்கொள்வோம். சரி.

*143* இங்கே இருக்கும் பெண்மணி, பிங்க் நிற ஆடை அணிந்து கொண்டு, உங்கள் தலையை இப்படி அசைத்தீர்கள். இயேசு கிறிஸ்து உங்கள் பிரச்சனை என்ன, அல்லது உங்களைப் பற்றி ஏதோ ஒன்றை என்னிடம் சொல்ல முடிந்தால், நான் அவருடைய தீர்க்கதரிசி என்று நீங்கள் என்னை நம்புவீர்களா; அது அவர்தான் என்று அறிந்துகொள்வீர்களா? உங்கள் பிரச்சனை உங்கள் முதுகில் இருக்கிறது. அது சரியாக இருந்தால், உங்கள் கையை உயர்த்துங்கள். பாருங்கள்? பாருங்கள்? பாருங்கள்? சரி. பாருங்கள்? பாருங்கள்?



*36* மேலும் இந்தத் தரகர், ஒரு நாள், ஒரு தோட்டத்திற்கு வந்து, "உங்களிடம் எத்தனை அடிமைகள் இருக்கிறார்கள்?" என்று கேட்டார். "சுமார் நூறு," என்று சொன்னார்.

"அவர்களைப் பாருங்கள்," என்றார்.

*37* மேலும் அவர் வெளியே சென்றார், மேலும் அவர் அவர்களைக் கவனித்தார், அவர்கள் அனைவரும் எப்படி... ஆனால் ஒரு இளம் வாலிபன், அவர்கள் அவனைச் சவுக்கால் அடிக்க வேண்டியிருக்கவில்லை.

அவனது நெஞ்சு நிமிர்ந்திருந்தது. அவனது தாடை உயர்ந்திருந்தது, மிகச் சரியாக. எனவே அந்தத் தரகர், வாங்குபவர், உரிமை யாளரிடம் சொன்னார், "சொல் லுங்கள், நான் அந்த அடிமையை வாங்க விரும்புகிறேன்," என்றார். அவர் சொன்னார், "ஓ, இல்லை. அவன் விற்பனைக்கு அல்ல."

*38* அவர் சொன்னார், "சரி," என்றார், "அந்த அடிமை, அவன் மற்றவர்களுக்கு

எஜமானா (boss)?" அவர் சொன்னார், "இல்லை, இல்லை, அவன் எஜமான் அல்ல."

"நீங்கள் அவருக்கு வித்தியாசமாக உணவளிக்கிறீர்களா?" என்று கேட்டார்.

*39* "இல்லை. அவர்கள் அனைவரும் அங்கே சமையலறையில் ஒன்றாகத்தான் சாப்பிடுகிறார்கள். அவன் ஒரு அடிமைதான்," என்றார். "மற்றவர்களிடமிருந்து அவனை இவ்வளவு வித்தியாசப்படுத்துவது எது?" என்று கேட்டார்.

*40* அவர் சொன்னார், "எது அவனை வித்தியாசப்படுத்துகிறது என்று நானே நீண்ட காலமாக ஆச்சரியப்பட்டேன். ஆனால் ஒரு நாள் நான் கண்டுபிடித்தேன். அவர்கள் வந்த தாய்நாடான ஆப்பிரிக்காவில், அவனுடைய தந்தை அந்தப் பழங்குடியினரின் ராஜா. இருப்பினும், ஒரு அந்நியனாக இருந்த போதிலும், அவன் ஒரு ராஜாவின் மகன் என்பதை அவன் அறிந்திருக்கிறான், மேலும் அவன் அதைப் போலவே நடந்து கொள்கிறான்.''



*140* அந்த ஒரு மனிதர், இப்போது, அவர் நான்-எனக்குத் தெரியாமலும் இருக்கலாம். அங்கே உட்கார்ந்திருக்கும் அந்த மனிதர், அவர் கையை உயர்த்தியிருக்கிறார், பாருங் கள், நான் நினைக்கவில்லை... அவருக்கு என்னைத் தெரியாது. அவருக்குத் தெரியாது என்று எனக்குத் தெரியும். ஆனால் அவர் எப்படியும்... தன் கையை உயர்த்தியி ருக்கிறார். அப்படியானால் நான் அவரைத் தொடமாட்டேன், பாருங்கள். நான்...

*141* நீங்கள் அனைவரும்... கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. உள்ளே இருக்கும் யாராவது ஜெபியுங்கள். நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? உங்கள் ஒவ்வொருவரும், நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? உங்கள் முழு இருதயத்தோடும், விசுவாசியுங்கள்.

*142* இங்கே ஒரு சிறிய பெண்மணி இருக்கிறார். நான் ஒரே ஒரு நபரை அழைக்கிறேன், பேசத் தொடங்குகிறேன், சும்மா ஒருவரிடம் பேசுகிறேன்; அது பரிசுத்த ஆவியானவரின் அசைவைப் பெறட்டும்.

ஒருவேளை அவர் என்னைப் புரிந்து கொள்ளவில்லை; ஏனென்றால் எனக்கு- எனக்கு அந்த மனிதரைத் தெரியாது. இப்போது நீங்கள் என்ன... உங்களுக்கு என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியும் என்பது உங்களுக்குத் தெரியுமா; ஆவிக்குரிய ரீதியில் இல்லாமல், ஒரு மனிதனாக எனக்கு உங்களைத் தெரியும், மேலும் உங்களுக்கு என்ன பிரச்சனை இருக்கிறது என்று தெரியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? [அந்த சகோதரர், "இல்லை" என்று சொல்கிறார்] நிச்சயமாக இல்லை. நிச்சயம். பாருங்கள், எனக்குத் தெரியாது. பாருங்கள், மழை பெய்கிறது, உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

*139* இப்போது பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வாராக. சரி, அப்படியானால் இந்தப் பகுதியைத் தொடங்குகிறேன். இங்கே உள்ள நீங்கள், நம்புங்கள்.



*41* ஓ, அது நமக்கு என்ன செய்ய வேண்டும்! நாம் அந்நியர்களாக இருந்தாலும், நாம் அவிசுவாசம், துக்கம், நோய் மற்றும் மரணம் நிறைந்த இருண்ட உலகத்தில் இருந்தாலும், நாம் தேவனுடைய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளைப் போல நடந்து கொள்வோம். நாம் ராஜாவின் குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக இருக்கிறோம்.

அது நம் மனப்பான்மையை, எல்லாவற்றையும் மாற்ற வேண்டும். உலகின் மற்ற பகுதி எப்படி இருந்தாலும், நாம் தேவனுடைய உரிமைகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இது நம் வீடு அல்ல என்பதை நாம் நினைவில் கொள்கிறோம். நாம் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. நாம் இந்த உலகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. நாம் மேலே இருக்கிற தேவனுடைய ஆவியினால் பிறந்திருக்கிறோம்.

*42* சென்று கொண்டிருந்தபோது, என் மனைவி, இங்கே வெகு காலத்திற்கு முன்பு அல்ல, ஒரு மளிகைக் கடைக்கு.

கோடைக்காலத்தில், இந்தியானாவில் நான் ஒரு விசித்திரமான காரியத்தைப் பார்த்தேன், ஒரு பெண் ஒரு ஆடையை (dress) அணிந்திருந்தாள்.

43 அவர்கள் அவற்றை இப்போது அணிவதில்லை, உங்களுக்குத் தெரியும். மேலும் அதனால், என் மனைவி சொன்னாள்... நான் சொன்னேன், "சரி, அங்கே பார்! அந்தப் பெண் ஒரு கிறிஸ்தவரா என்று ஆச்சரியமாக இருக்கிறது." அவள் சொன்னாள், "சரி, இந்தப் பெண்கள் எல்லோரும்; இவர்களில் சிலரை எனக்குத் தெரியும், அவர்கள் சபைகளிலுள்ள பாடகர் குழுக்களில் பாடுகிறார்கள்."

அவள் சொன்னாள், "ஏன், பில், அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்?" நான் சொன்னேன், நிச்சயமாக... "மேலும்-மேலும் நம் மக்கள் அப்படிச் செய்வதில்லை." நான் சொன்னேன், "நிச்சயமாக. நாம் வேறு தேசத்தைச் சேர்ந்தவர்கள்."



ஆனால் வெளியே இங்கே, உங்களுக்கு என்னைத் தெரியாது.

137 இங்கே இந்த ஒரு வரிசையில் எத்தனை பேருக்கு என்னைத் தெரியாது, உங்கள்... உயர்த்துங்கள். இங்கே உள்ள இந்த மூன்று வரிசைகளில், இதோ இங்கே, என்னைத் தெரிந்த யாராவது இருக்கிறார்களா; உங்களைப் பற்றி எனக்கு ஏதோ தெரியும் என்று தெரிந்தவர்கள், மற்றும் எல்லாம்? உங்கள் கைகளை உயர்த்துங்கள்.

138 அங்கே பின்னால் எனக்கு உங்களைத் தெரியுமா? எனக்கு உங்களைத் தெரியுமா, சகோதரரே? அவர் என்னைப் புரிந்து கொண்டார் என்று நான் நினைக்கவில்லை, ஏனென்றால் எனக்கு அவரைத் தெரியாது. அவருக்கு என்னைத் தெரியாது. இல்லை. உங்களுக்கு என்னைத் தெரியாது, இல்லையா, ஐயா? உங்களுக்கு-உங்களுக்கு-உங்களுக்கு என்னைத் தெரியுமா? உங்களுக்கு என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் யார்?

எல்லாரும் அமர்ந்திருக்கும் பார்வையா ளர்களுக்கு முன்பாக இங்கே நிற்பது; ஆனாலும் அவரைக் காண்பது, அவரை இந்த இடத்திற்கு அழைப்பது.

*134* அவர் இங்கே இருக்கிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? சரி.

*135* அருகில் யாராவது. இப்போது என் நண்பர்கள் அல்ல; நீங்கள்-நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், யாராவது, என் நண்பர்கள். இங்கே எனக்கு நேர் முன்னால் இருப்பவர்களில் எத்தனை பேருக்கு, எனக்கு உங்களைத் தெரியாது என்று தெரியும், உங்கள் கைகளை இப்படி உயர்த்துங்கள்?...

*136* இப்போது இங்கே எனக்குத் தெரிந்த சிலர் இருக்கிறார்கள். பாருங்கள், இந்த வரிசையில், அவர்களுக்கு என்னைத் தெரியும், இதோ இங்கே. அது சரிதானே, சகோதரர்களே, அங்கே உள்ள நீங்கள் அனைவரும்? பாருங்கள்? இங்கே பாருங்கள். பாருங்கள், அவர்களுக்கு என்னைத் தெரியும்.



*44* அவள் சொன்னாள், "நாம் அமெரிக்கர்கள் இல்லையா?" நான் சொன்னேன், "ஓ, இல்லை. நாம் இங்கே முகாமிட்டிருக்கிறோம். நாம் அமெரிக்கர்கள் அல்ல." நான் சொன்னேன், "பார், நாம் மேலிருந்து வந்தவர்கள்."

*45* பரிசுத்த ஆவியானவர் கீழே வந்தார், நம் இருதயங்களை தேவனுடன் இணைத்தார், மேலும் ஆபிரகாமைப் போல, "நாம் யாத்திரிகர்கள் மற்றும் அந்நியர்கள்" என்று நாம் அறிக்கை செய்தோம். இது நம் வீடு அல்ல. "கட்டுகிறவரும் உண்டு பண்ணுகி றவரும் தேவனாயிருக்கிற ஒரு நகரத்தை நாம் தேடுகிறோம்," மேலிருந்து வருகிறது. ஆம், நாம் ஒரு ராஜாவின் குமாரர்கள் மற்றும் குமாரத்திகளாக இருக்கிறோம்.

*46* இப்போது நான் வேடிக்கையாக ஒலிக்கும் ஒரு சிறிய விஷயத்தைக் கொண்டு வரப் போகிறேன், சில நிமிடங்களுக்கு மட்டுமே, ஆனால் நான் இங்கே ஒரு

விசாரணையை, ஒரு நீதிமன்ற விசாரணையை நடத்தப் போகிறேன்.

*47* உங்களுக்கு நான் பேசுவது கேட்கிறதா? எவ்வளவு தூரம் பின்னால் உங்களுக்கு நான் பேசுவது கேட்கிறது, உங்கள் கைகளை உயர்த்துங்கள். சரி, நல்லது. இந்தப் பக்கம் பின்னால், உங்களுக்கு நான் பேசுவது கேட்கிறதா? நல்லது. என்னால் முடிந்தவரை, ஏறக்குறைய அவ்வளவு சத்தமாக நான் பேசுகிறேன்.

*48* நான் ஒரு நீதிமன்ற விசாரணையை நடத்தப் போகிறேன், மேலும் அந்த வழக்கு: தேவனுடைய வார்த்தை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது (எதிர்) உலகம் (The Word of God, Promised v. The World). இப்போது நாம் இதை ஒரு நீதிமன்ற விசாரணையைப் போல அமைக்கப் போகிறோம், சிறிது நேரத்திற்கு, நீங்கள் இந்த ஜெப வரிசைக்கு வருவதற்கு முன்பாக. தேவனுடைய வார்த்தை (எதிர்) உலகம்.



எடுத்து, அந்த கற்பனையை எடுத்து, உங்கள் கால்களுக்குக் கீழே போட்டு, "எனக்கு விசுவாசம் இருக்கிறது, அது நடக்கும் என்று எனக்குத் தெரியும்!" என்று சொல்லுங்கள். ஏதோ ஒன்று நடக்கும்.

*133* நண்பர்களே, நான் இங்கே நிற்பது எனக்கு எப்படி இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நான் இங்கே இப்போது இருப்பது போல நிற்பது எனக்கு எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள், சில நேரங்களில் ஆயிரக்கணக்கான, மற்றும் நூறாயிரக்கணக்கான பார்வையாளர்களுக்கு முன்பாக, அவர் உயிரோடு இருக்கிறார் என்று ஒரு கோரிக்கையை வைப்பது, மேலும் அவர் எனக்குக் கொடுக்கும் வார்த்தையை அவருடைய ஆவியானவர் என்னிடம் சொன்னார்...? அதை ஆதரிக்க முடியாமல் தேவனால் எதையும் செய்ய முடியுமா? பாருங்கள், அவர் அதைச் செய்வார் என்று சொன்னார்! அதுதான் வார்த்தை. பல்லாயிரக்கணக்கில் சந்தேகப் படுபவர்கள், அவிசுவாசிகள் மற்றும் மற்ற

வாக்குறுதியையும் நிறைவேற்ற அவர் மிகவும் வல்லவர் என்று நான் நம்புகிறேன். அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் அவரால் காத்துக்கொள்ள முடியும், மேலும் நாம் அதை நம்பினால் மட்டுமே, அவர் இன்று மதியம் அதை நமக்காகச் செய்வார்.

*130* இப்போது, "நீங்கள் புறப்பட்டுப் போய், சக்கர நாற்காலிகளில் இருந்து மக்களைத் தூக்கி நிறுத்துங்கள், இருதய நோயாளிகளை அழைத்து இதைச் செய் யுங்கள்" என்று அவர் ஒருபோதும் சொல்ல வில்லை. அவர் அதைச் சொல்லவில்லை.

*131* "வியாதிஸ்தர்மேல் கைகளை வையுங்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்த மாவார்கள்," என்றார். அது விசுவாசிகள்.

*132* இப்போது, பரிசுத்த ஆவியானவர் இங்கே அவருடைய தற்காப்பு சாட்சியாக இருக்கிறார், நீங்கள் அதை நம்புகிறீர்களா இல்லையா என்பது அவருக்குத் தெரியும். சும்மா ஊகித்துக்கொண்டு வராதீர்கள். அந்த ஊகத்தை எடுத்து, அந்த நம்பிக்கையை



*49* இப்போது, வழக்கு, இந்தக் குற்றச்சாட்டுக்கான காரணம், வாக்குறுதி மீறல் (breach of promise), அதாவது, "தேவனுடைய வாக்குத்தத்தங்கள்," அவர்கள் கோருவது என்னவென்றால், "தேவன் தனது வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றவில்லை."

*50* இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞர் சாத்தான், மேலும் அவன் உலகின் சாட்சி, ஏனென்றால் அவன் உலகத்தைச் சார்ந்தவன். இந்த வழக்கில் பிரதிவாதி சர்வவல்லமையுள்ள தேவன். இந்த வழக்கின் தற்காப்பு சாட்சி பரிசுத்த ஆவியா னவர். நாம் அவர்களை விசாரணைக்கு அழைக்கப் போகிறோம், சில நிமிடங்களுக்கு மட்டுமே.

*51* அரசு தரப்பு வழக்கறிஞரின் சாட்சிகள், தன் வழக்கை ஆதரிப்பதற்காக அவன் கொண்டு வருபவர்கள், திரு. அவிசுவாசம் (Mr. Unbelief), திரு. சந்தேகம் (Mr. Skeptic) மற்றும் திரு. பொறுமையின்மை (Mr. Impatient) ஆவர்.

*52* நாம் அவர்களுக்கு ஒரு விசாரணையை வழங்கப் போகிறோம். நீதிமன்றம் இப்போது ஒழுங்குபடுத்தப்படுகிறது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது சாட்சியான திரு. அவிசுவாசத்தை அழைக்கிறார். அவர் முதலில் சாட்சிக் கூண்டில் ஏறுகிறார்.

*53* உங்களுக்கு இன்னும் நான் பேசுவது கேட்கிறதா? "ஆமென்" என்று சொல்லுங்கள். [சபையார், "ஆமென்" என்று சொல்கிறார்கள்] சரி. நல்லது. இப்போது நான் இன்னும் கொஞ்சம் நிம்மதியாக உணர முடிகிறது.

*54* இப்போது, நீங்கள் புரிந்து கொள்ளுங்கள், இது தேவனுக்கு எதிரான ஒரு வழக்கு, திரு. அவிசுவாசம் மற்றும் திரு. சந்தேகம் மற்றும் திரு. பொறுமையின்மை ஆகியோர் தேவனை ஒரு-ஒரு விசாரணைக்கு அழைக்கிறார்கள், "ஏனென்றால் அவர் தனது வார்த்தையைக் காப்பாற்றவில்லை" என்று அவர்கள் சொல்கிறார்கள். சரி.

*55* இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞர், அவர் எப்போதும் அரசைப்



ஆபிரகாமுக்குச் செய்தது போலவே, அதே முறையில், மனித மாம்சத்தில் இங்கே எங்களுக்குத் தோன்றுகிறீர்! தேவனே, அவர்கள், ஒவ்வொருவரும், இன்று மதியம் அதைக் கண்டு, செழிக்கும்படி அருள் செய்யும். ஒவ்வொரு முறையும் மக்கள் கடந்து செல்லும்போது, மற்றும் அவர்கள் மேல் கைகள் வைக்கப்படும்போது, அவர்கள் இந்தக் கட்டிடத்தை விட்டு மகிழ்ச்சியுடன் செல்லட்டும், ஒருபோதும் அதைத் திரும்பப் பெறாமல், ஆனால் ஆபிரகாம் மற்றும் மற்ற முற்பிதாக்கள் அனைவரையும் போல நம்பட்டும். அது நடக்கும் என்று நீர் சொன்னீர், அவர்கள் சோர்ந்து போகாமல் இருந்தால் அது நடக்கும். இயேசுவின் நாமத்தில், அருள்தாரும். ஆமென்.

*129* நான் நம்புகிறேன். நான் நம்புகிறேன். நீங்கள் நம்புங்கள்! இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நான் நம்புகிறேன். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று நான் நம்புகிறேன். அவர் வாக்குத்தத்தம் செய்த எந்த

மக்கள் அதை, ஒரு தலைமுறை அல்லது இரண்டு தலைமுறைகளுக்கு நம்பினார்கள், பின்னர் அது மறைந்து போனது. இருப்பினும், எண்ணூறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு கன்னிப்பெண் கர்ப்பமாகி ஒரு குழந்தை பிறந்தது. அவருடைய நாமம் 'அலோசனைக்கர்த்தா, சமாதானப் பிரபு, வல்லமையுள்ள தேவன், மற்றும் நித்திய பிதா,' எண்ணூறு ஆண்டுகளுக்குப் பிறகு."

*128* ஓ கர்த்தராகிய தேவனே, பூமியில் இன்று இருக்கும் மக்களாகிய எங்களிடம், நம்மை ஆபிரகாமின் ராஜரீக சந்ததி என்று அழைத்துக் கொள்வதில் என்ன பிரச்சனை இருக்கிறது? அவர், இருபத்தைந்து ஆண் டுகள் காத்திருந்து, சாத்தியமற்ற வைகளுக்கு எதிராக நம்பிக்கையும்-நம்பிக்கையும் விசுவா சமும் கொண்டு, ஒரு அற்புதம் செய்யப் படுவதைக் கண்டார், அதை நீர் செய்தீர். நாங்கள் உம்முடைய வார்த்தையை எவ்வளவு அதிகமாக ஏற்றுக் கொள்ள முடியும், ஆபிரகாமுக்குத் தோன்றிய அதே கண்ணுக்குப் புலப்படும் தேவனாக நீர் இருக்கும்போது,



பிரதிநிதித்துவப்படுத்துகிறார், எனவே இந்த அரசில் அரசு தரப்பு வழக்கறிஞர் சாத்தானே. மேலும் அவன்... நாம் விசாரணையை அழைக்கிறோம்.

*56* சரி, அவர்கள் முதலாமவரைச் சாட்சிக் கூண்டிற்கு அழைக்கிறார்கள், அது திரு. அவிசுவாசி. அவர் இதைப் புகாரளிக்கிறார், அதாவது, "தேவன் வாக்குத்தத்தம் பண்ணின வார்த்தை எதுவும் உண்மையில்லை."

*57* இப்போது அவர் இதற்காக விசாரிக்கப்படப் போகிறார். இப்போது கவனமாகக் கேளுங்கள். அதைத் தவறவிடாதீர்கள்.

*58* நான் இப்போது படித்த மாற்கு 16, மற்றவர்கள் சுகம் பெறுவதாகக் கோரிய ஒரு பரிசுத்த ஆவி கூட்டத்தில் அவருக்குப் போதிக்கப்பட்டது என்று அவர் கூறுகிறார். மேலும் அது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவருக்குப் போதிக்கப்பட்டது, ஆனால் அவரிடம் இன்னும் எந்த மாற்றமும் இல்லை, அதாவது, "இந்த 'அடையாளங்கள்'

விசுவாசிக்கிறவர்களைப் பின்தொடர்வதில் லை." அதற்கு எதிராகத் தான் இந்தக் கோரிக்கையை வைத்ததாக அவர் சொன்னார். சரி, அவர் அமருகிறார்.

*59* நாம் அடுத்த சாட்சியை அழைக்கிறோம். அது திரு. சந்தேகம். அவர் யாக்கோபு *5:14* என்ற தேவனுடைய வார்த்தையின் வேதவசனத்தை எடுத்துக் கொள்கிறார். மேலும் அவர் மூப்பர்கள் அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஒரு இடத்தில் இருந்ததாகவும், அவர் எண்ணெயால் அபிஷேகம் செய்யப்பட்டு ஜெபிக்கப்பட்டதாகவும் கூறினார்.

மேலும் அது ஒரு மாதத்திற்கு முன்பு நடந்தது, ஆனால் அவரிடம் இன்னும் எந்த மாற்றமும் இல்லை, எனவே அது தவறு என்று அவருக்குத் தெரியும். அவர் அதற்காகத் தேவனை அழைக்கிறார், மேலும் தேவனைப் குற்றம் சாட்டுகிறார்.

*60* அடுத்த சாட்சி திரு. பொறுமை யின்மை. அவர் ஒரு மோசமான ஆள். சரி.



மேலும், அவர்கள் கடந்து வரும்போது, ஆபிரகாம் செய்தது போலவே தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்வார்களாக. குழந்தை எப்போது என்பது ஒரு பொருட்டல்ல...

*127* நாம் ஏசாயாவை இந்த இடத்திற்கு அழைக்கலாம், மேலும் ஏசாயா சாட்சிய ளித்திருக்க முடியும். "கர்த்தர் என்னிடம் சொன்னார், 'ஒரு கன்னிப்பெண் கர்ப்ப மாவாள்'" என்று அவர் சொல்லியிருப்பார். இன்று மதியம் அவர் எழுந்து நம்மிடம் பேச முடிந்தால், அவர் இதைச் சொல்வார் என்பதில் சந்தேகமில்லை, "என் வாழ்நாள் முழுவதும், ஒவ்வொரு இளம் எபிரெயப் பெண்ணும், பரிசுத்த ஆவியினால் கர்ப்ப மாவதை எதிர்நோக்கினார்கள்; ஒவ்வொ ருவரும். ஆனால் நீர் அதைச் சொன்னீர், அதை எழுதி வைத்தீர். நீர் என்னை உம்முடைய தீர்க்கதரிசியாக அடையாளம் காட்டினீர். மேலும் நான் சொன்ன என் வார்த்தைகள் உம்மால் ஆதரிக்கப்பட்டன. என் தரிசனங்கள் உண்மையானவை. மேலும்

*125* எல்லாக் காலங்களிலும் உள்ள மக்களுக்கு, அது மக்களுக்கு ஒரு விசித்திரமான காரியமாகத் தோன்றியிருக்கிறது. அன்று இரவு அவர்கள் கடலில் இருந்தபோது, மற்றும்-மற்றும் நீர் அவர்களிடம் வந்தபோது, அது ஆவி என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்கள்... அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை, அவர்கள் அலறினார்கள். ஆனால் அந்தச் சத்தம் திரும்ப வந்தது, "நான்தான்."

*126* வேதவசனத்தின் சத்தம், இன்று மதியம் பேசுகிறது, இதுவே மணிநேரம், இதுவே காலம், சோதோம் மற்றும் கொமோரா மற்றும் இந்த மற்ற எல்லா காரியங்களும் அவை எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இருக்கின்றன. மேலும் இதோ இங்கே நீர் இருக்கிறீர், நீர் உயிரோடு இருக்கிறீர் என்பதை ஆபிரகாமின் ராஜரீக சந்ததிக்குக் காண்பிக்கிறீர், மற்றும் சோதோமின் இந்நாளில் மனுகுமாரன் வெளிப் படுத்தப்படுகிறார். பரலோகப் பிதாவே, மக்கள் காணும்படி அருள் செய்யும்;



திரு. பொறுமையின்மை, மாற்கு *11:22* மற்றும் *23*-ல் உள்ள தேவனுடைய வார்த்தையிலிருந்து படித்ததாகக் கூறுகிறார், அதாவது நீங்கள் ஜெபித்தபோது, நீங்கள் ஜெபித்ததைப் பெற்றுக்கொள்வீர்கள் என்று விசுவாசித்தால், நீங்கள் கேட்டதை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் அவர் வார்த்தையை வாசித்து, தன்னைச் சுகமாக்கும்படி தேவனிடம் கேட்ட பிறகு, தன் ஊன்றுகோல்களைக் கீழே வைக்கக் கேட்டதாகச் சொன்னார். மேலும் அவர் தன் ஊன்றுகோல்களைக் கீழே வைக்கக் கேட்டார், அது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது, அதன் பிறகு அவரால் அவற்றை ஒருபோதும் கீழே வைக்க முடியவில்லை.

*61* ஆகவே அவர்கள் கோருகிறார்கள், "தேவன் இத்தகைய அவசரமான வாக்குத் தத்தங்களைத் தனது வார்த்தையில் வைப்பதில் நியாயமற்றவர்." தேவனுக்கு எதிரான வழக்கை இப்போது நீங்கள் புரிந்து

கொள்கிறீர்களா? "மாற்கு 11:23, 22 மற்றும் 23, மற்றும் மாற்கு 16, யாக்கோபு 5:14, மற்றும் அதுபோன்ற வாக்குத்தத்தங்களை வைப்பதில் அவர் நியாயமற்றவர்." வாக்குறுதி மீறலுக்காக அவர்கள் அவரைக் குற்றம் சாட்டுகிறார்கள், அதாவது, "அவர் தனது வாக்குத்தத்தத்தை மீறிவிட்டார், மேலும் அதைக் காப்பாற்ற முடியவில்லை."

மேலும் அவர்கள் இத்தகைய காரியங்களைத் தனது வார்த்தையில் வைத்ததற்காக அவரைக் குற்றம் சாட்டுகிறார்கள், ஏனென்றால், "அவரை விசுவாசிக்கிற பிள்ளைகள் அந்தக் கோரிக்கைகளால் அடையாளம் காணப் படுவதில்லை, மேலும் இது அவர்கள் துன்புறுத்தப்படுவதற்கு ஏதுவாக்குகிறது, ஏனென்றால் அவர்கள் இல்லை... தேவன் வாக்குத்தத்தம் செய்த பிறகு தனது வார்த்தையை அடையாளம் காட்டுவ தில்லை."

62 ஓ, இங்கே இப்போது நமக்கு ஒரு உண்மையான வழக்கு இருக்கிறது. அவர்கள்



மதத்தில் அவரை ஏதோ ஒரு வரலாற்று ரீதியான தேவனாக மாற்ற முயற்சிக்கும் அவிசுவாசியின் வாயை மூடுவதற்கும்.

124 ஆண்டவரே, நீர் இன்று மதியம் மீண்டும் எங்கள் மத்தியில் அவரைத் தோன்றப்பண்ணும்படி நான் ஜெபிக்கிறேன், மேலும் நீர் இங்கே இருக்கிறீர் என்பதை இந்தச் சபையோருக்கு நிரூபியும்; வார்த்தையைச் சொன்னவர், நாங்கள் விசாரணை செய்துகொண்டிருக்கிற தேவன் நீரே. என்னைப் பொறுத்தவரை, ஆண்டவராகிய தேவனே, நீர் நீதிமானாக இருக்கிறீர். தேவனே, நீர் உம்மை நிரூபித்திருக்கிறீர். ஒவ்வொரு ஆணும் பெண்ணும், உம்மை உண்மையாக உணரும்படி செய்யும், இங்கே ஒழுகிக்கொண்டிருக்கிற இந்தக் களஞ்சியத்தில் அமர்ந்திருக்கிற இந்த ஏழை மக்கள், வார்த்தையைக் கேட்க முயற்சிக்கும் அவர்களுக்கு, பிதாவே, அதை மிகவும் உண்மையானதாக மாற்றும். எங்கள் மத்தியில் நீர் தேவன் என்பதை வெளிப்படுத்தும்!

*122* நீர் சொன்னீர், "உன்னால் விசுவாசிக்க கூடுமானால்! நீங்கள் இந்த மலையைப் பார்த்து, உங்கள் இருதயத்தில் சந்தேகப் படாமல் இருந்தால், நீங்கள் சொன்னது நடக்கும். நீங்கள் அதை விசுவாசித்தால்!" நீர் சொன்னீர், "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன. வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." ஆண்டவரே, நான் அதை மக்களிடமே திரும்ப ஒப்படைத்திருக்கிறேன். அது அவர்களின் கையில் இருக்கிறது.

*123* பரிகாரம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை, நான் வேதாகமத்தின் மூலம் அவர்களுக்கு நிரூபித்திருக்கிறேன், அது நம் அனைவருக்கும் தெரியும். "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார். அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம்." சந்தேகப்படுபவரின் வாயை மூடுவதற்கு, இது கடந்த கால வினைச்சொல்லாக இருக்கிறது, மற்றும் அவர் உயிர்த்தெழவில்லை என்று சொல்லி,



எப்படிச் சாட்சியளிக்க முடியும் என்று நான் அவர்களைப் பார்க்கிறேன்! இருப்பினும், சாட்சிகள் மீண்டும் எழுந்து நின்று, "ஆனாலும், நாங்கள் விசுவாசிகள்!" என்று சொல்வதைக் கேளுங்கள். அவர்கள் தங்களை விசுவாசிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

"மேலும் அவர் சொன்னார், 'விசுவாசிக் கிறவர்களை இந்த அடையாளங்கள் பின் தொடரும்.' 'விசுவாசமுள்ள ஜெபம் நோயாளியை இரட்சிக்கும்.' 'நீங்கள் இந்த மலையைப் பார்த்து, "பெயர்ந்து போ" என்று சொல்லி, உங்கள் இருதயத்தில் சந்தேகப் படாமல் இருந்தால், அது நடக்கும்.' மேலும் நாங்கள் விசுவாசிகளாக இருக்கிறோம்."

மேலும், மீண்டும் ஒருவர் எழுந்து நின்று, "இருந்தாலும், தேவனாகிய அவர், விசுவாசிகளுக்கு எல்லாம் கூடும் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்," என்று சொன்னார். தேவனுக்கும் அவருடைய வார்த் தைக்கும் எதிராக எப்பேர்ப்பட்ட ஒரு குற்றச்சாட்டு!

*63* "மேலும், மீண்டும், அவர் சிலுவையில் அறையப்பட்ட பிறகு உயிரோடு இருப்பதாகக் கோருகிறார். மேலும் எபிரெயர் *13:8*-ல் உள்ள அவரது வேதவசனம், அவர் நேற்று இருந்தது போலவே இன்றும், என்றும் மாறாத தேவனாக இருக்கிறார் என்று கோருகிறது." அதே தேவனைக் குறித்து நினைத்துப் பாருங்கள்! மேலும் அவர்கள் அதற்காக அவரைக் குற்றம் சாட்டுகிறார்கள், ஏனென்றால், "அது அப்படியல்ல," அவர்களால் அதைச் சரியாகச் செயல்பட வைக்க முடியவில்லை. சரி.

*64* "மேலும், அவர் கோருகிறார்," இது இப்போது புகாரளிப்பவர், "வானமும் பூமியும் ஒழிந்துபோம், ஆனால் அவருடைய வார்த்தை ஒருபோதும் ஒழிந்துபோகாது என்று அவர் கோருகிறார்." விசுவாசிகள் என்று சொல்லிக்கொள்பவர்கள் பேசுவது இதுதான். இப்போது, என்ன ஒரு குற்றச்சாட்டு!

தேவனுக்கு எதிராக நமக்கு எப்பேர்ப்பட்ட ஒரு புகார் இருக்கிறது,



*121* இந்த மற்ற மனிதர்களின் சாட்சியத்தைக் குறித்து நான் சாட்சி பகர்கிறேன் அல்லது பேசினேன். ஆயிரக் கணக்கான ஆயிரங்களை இரு பக்கங்களுக்கும் என்னால் அழைக்க முடியும்; சந்தேகப்படுபவர், அவிசுவாசி, மற்றும் நீண்ட நேரம் காத்திருக்க முடியாத மனிதர். நீர் எப்போது என்று ஒருபோதும் சொல்லவில்லை. நீர் சொன்னீர், "அவர்கள் வியாதிஸ்தர்மேல் கைகளை வைத்தால், அவர்கள் விசுவாசித்தால், அவர்கள் சொஸ்தமாவார்கள், அது எந்த நேரமாக இருந்தாலும் சரி. குழந்தை எப்போது பிறக்கும் என்று நீர் ஆபிரகாமிடம் ஒருபோதும் சொல்லவில்லை. மக்களை அந்த மலைக்கு எந்த நாளில் திரும்பக் கொண்டு வருவார் என்று நீர் மோசேயிடம் ஒருபோதும் சொல்லவில்லை. மழை எந்த நாளில் பெய்யும் என்று நீர் நோவாவிடம் ஒருபோதும் சொல்லவில்லை. நீர் அவர்களுக்கு எந்தக் குறிப்பிட்ட நேரத்தையும் சொல்லவில்லை; எங்களுக்கும் நீர் சொல்லவில்லை.

*120* நாம் வேதாகமத்தில் வாசிக்க முடியும், அந்தக் கதாபாத்திரங்களின் சாட்சி களை, அவிசுவாசிகளின் சாட்சியை. அவர்கள் எப்போதும் அதைக் கண்டித்ததை நாம் காண்கிறோம். அந்நாட்களில் அந்தப் பரிசேயர், மதவாதிகள், இயேசு கிறிஸ்துவைக் கண்டித்தார்கள். ஆனால் அது நிரூபிக்கப் பட்டது, அவர் தேவனுடைய குமாரன் என்று. அவர்கள் சொன்னார்கள், "நீர் உம்மைத் தேவன் என்று ஆக்கிக்கொள்கிறீர்." அவர் தேவனாக இருந்தார். அவர் தேவனைப் போல நடந்துகொண்டார்; அவர் தேவனைப் போலப் பிரசங்கித்தார்; அவர் தேவனைப் போலக் குணமாக்கினார்; அவர் தேவனைப் போல மரித்தோரிலிருந்து எழுந்தார்; அவர் தேவனைப் போல உன்னதத்திற்கு ஏறினார். அவர் தேவனாக இருக்கிறார். அவர் வருகிறார், தேவன். நாங்கள் அதை விசுவாசிக்கிறோம். எல்லாப் பிரச்சனை களுக்கும் மத்தியில், நீர் இன்னும் தேவனாக இருக்கிறீர். ஆண்டவரே, உம்முடைய சாட்சி தனித்து நிற்கிறது.



அதாவது, "அவர் இந்த அறிக்கைகளைச் செய்திருக்கிறார், ஆனால் அதைக் காக்கிற அளவுக்குப் பெரியவர் அல்ல." அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*65* மேலும் அரசு தரப்பு வழக்கறிஞரான சாத்தான் அங்கே அமர்ந்து, உலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தேவனுக்கு எதிரான இந்த வாக்குறுதி மீறலைக் கோருகிறான், ஏனென்றால், "இந்த மக்கள் வந்திருக் கிறார்கள், இந்தக் கூட்டங்களில் இருந்திருக் கிறார்கள், மேலும் தேவன் சொன்ன இந்தக் காரியங்கள் சரி என்று ஏற்றுக்கொண்டார்கள், ஆனாலும் அவர்களுக்கு ஒன்றும் நடக்கவில்லை."

*66* இப்போது, இப்போது அரசு தரப்பு சாட்சிகள் ஒரு நிமிடம் கீழே இறங்கட்டும், உங்களுக்குத் தெரியும். அவர்களுக்கு மற்றொரு பக்கம் இருக்கிறது.

*67* இப்போது நாம் தற்காப்பு சாட்சியை அழைப்போம். பிரதிவாதியின் தற்காப்பு சாட்சி, அது தேவன். தேவனுக்கான தற்காப்பு

சாட்சி பரிசுத்த ஆவியானவர். அவரைச் சாட்சிக் கூண்டிற்குக் கொண்டு வாருங்கள். அவருடைய சாட்சியத்தைக் கேட்போம்.

*68* என்னே! முதலாவதாக, மக்களுக்கு வார்த்தையை அரசு தரப்பு வழக்கறிஞர் தவறாகப் பொருள் விளக்கம் செய்வதை அவர் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். "அது சரிதான், ஏனென்றால் ஏவாள் வைத்திருந்த அதே விளக்கவுரையாளர் தான் இவனும். ஏவாள் வைத்திருந்த அதே விளக்கவுரையாளர். 'ஓ, நிச்சயமாக, இது அல்லது... இது சரியானது, ஆனால் அது அல்ல.' பாருங்கள், அதே விளக்கவுரையாளர், அரசு தரப்பு வழக்கறிஞர் தான், ஏனென்றால் அவன் ஒரு பிசாசு. அதே நபர் தான்..."

*69* தேவன் தனது பிள்ளைகளைத் தனது வார்த்தைக்குப் பின்னால் பாதுகாப்பு அரணாக வைத்தார். நீங்கள் அதற்குப் பின்னாலிருந்து வெளியே வரும் அந்த முதல் கணமே, நீங்கள் பிசாசுக்கு ஒரு இலக்கா கிறீர்கள். ஆனால் நீங்கள் வார்த்தையால்



என்பதைச் சொல்லும். அது மிகச் சரியாகச் சொல்லும், இனிமேல் உங்கள் செயல்.

*118* இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்று நான் அறிவிக்கிறேன். அதை விசுவாசிக்கிற ஆண்களுக்கும் பெண்களுக்கும், அவருடைய பிரசன்னத்தில் நிற்கக்கூடியது எதுவுமில்லை என்று நான் அறிவிக்கிறேன். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?

நாம் நம் தலைகளைத் தாழ்த்துவோம்.

*119* ஆண்டவரே, இயேசுவே, இப்போது உம்மிடமிருந்து ஒரே ஒரு வார்த்தை, மக்களை விசுவாசிக்கச் செய்யும். அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். நான் இதைச் செய்யப் போவதில்லை, பிதாவே. ஆனால், அவர்கள் அவ்வளவு பொறுமையாக இருந்திருக்கிறார்கள், நான் இப்போது கேட்கிறேன். நீர் செய்ய மாட்டீரா, என் சொந்த சாட்சியின் பேரில்?

னும் காத்திருந்து வேடிக்கை பார்க்கிறார்கள். ஆனால் தேவன், முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அதை உறுதிப் படுத்தியிருக்கிறார், உலகளாவிய ரீதியில், உலகம் முழுவதும். எங்கே தாள்கள், பத்திரிகைகள் மற்றும் கட்டுரைகள் எழுதப் பட்டிருக்கின்றனவோ, உலகம் முழுவதும்.

117 நீங்களே நீதிபதியாக இருங்கள். உங்கள் மனமே ஜூரி (நடுவர் குழு). ஒவ்வொரு ஜூரியும் தன் மனதை ஒரு முகப்படுத்த வேண்டும். நான் நீதிமன்றத்தை மூடுகிறேன். நீங்களே நீதிபதியாக இருங்கள். உங்கள் மனமே ஜூரி. மேலும் இனிமேல் உங்கள் செயல்கள், இன்று மதியம், நாங்கள் வியாதிஸ்தர்கள் மேல் கைகளை வைக்கும் போது, உங்கள் தீர்ப்பு என்ன என்பதை அது உச்சரிக்கும். நீங்கள் ஜெபிக்கப்பட்ட பிறகு நீங்கள் நடந்துகொள்ளும் விதம், நீங்கள் என்ன... உங்கள் அறிவுஜீவி மனம் எதை முடிவு செய்திருக்கிறது, உங்கள் மனதின் ஜூரி எதை முடிவு செய்திருக்கிறது



பலப்படுத்தப்பட்டிருக்கும் வரை அவனால் உங்களைப் பிடிக்க முடியாது.

70 "இப்போது வாக்குத்தத்தமானது..." அவர் மீண்டும் சொன்னார், "நான் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்." சொல்கிறார்... இப்போது இது தற்காப்பு சாட்சி, பரிசுத்த ஆவியானவர். அவர் சொன்னார், "வாக்குத்தத்தம் விசுவாசிகளுக்கு மட்டுமே, பாசாங்கு செய்பவர்களுக்கும், சந்தேகப்படுபவர்களுக்கும், அவிசுவாசிகளுக் கும் அல்ல.

வாக்குத்தத்தம் விசுவாசிகளுக்கு மட்டு மே, மற்றவர்களுக்கு அல்ல." இப்போது, இது-இது தற்காப்பு சாட்சி. மேலும் தற்காப்பு சாட்சிக்குத் தெரிந்திருக்க வேண்டும், ஏனென் றால் அதை அவர்களுக்கு உயிர்ப்பிக்கிறவர் அவரே. அது உண்மையா இல்லையா என்று அவருக்குத் தெரியும்.

71 வார்த்தையை உயிர்ப்பிக்கிறவராக இருப்பதால், அவர் இங்கே கவனத்தையும் ஈர்க்க விரும்புகிறார், அவர் கவனத்தை

ஈர்க்கிறார், அதாவது, "வார்த்தை ஒரு விதை. அந்த விதை சரியான, வளமான நிலங்களில் விழுந்தால், தேவன் அது செய்யும் என்று சொன்னதை அப்படியே அது உற்பத்தி செய்யும்.

ஆனால் அது சரியான வகையான நிலத்தில் விழவில்லை, எனவே அந்த விதை வளர்வதற்குப் போதுமான மண் இல்லை, போதுமான விசுவாசம் இல்லை." விதையை உயிர்ப்பிக்கிறவராக, அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

நீங்கள் அப்படி நினைக்கவில்லையா? எத்தனை பேர் அதை நம்புகிறீர்கள்? "ஆமென்" என்று சொல்லுங்கள். [சபையார், "ஆமென்" என்று சொல்கிறார்கள்] தெரிந்தி ருக்கிற ஒருவர் அவராகவே இருக்க வேண்டும். அவரே உண்மையான தற்காப்பு சாட்சி. சரி.

72 தற்காப்பு தரப்பு, இப்போது சாட்சியளிக்கிறது, தனது முதல் சாட்சியை அழைக்கப் போகிறது. இப்போது, நீங்கள்



மற்றும் உலகம் முழுவதும் செல்லக்கூடிய ஒரு எழுப்புதலைப் பற்றவைக்கப் போகிறானா? பில்லி, உன்னை நீயே கவனித்துக்கொள்."

116 ஆனால், அது அதைச் செய்தது! அது அதைச் செய்தது! முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, எழுப்புதல் முடிந்தது, மேலும் அது அதைச் செய்தது. தேவன் அப்படிச் சொன்னார்! நான் அவருடைய சாட்சி. அவர் எப்போது அதைச் செய்வார் என்று சொல்லவில்லை. அவர் அதைச் செய்வார் என்று சொன்னார்! வார்த்தை மிகவும் உண்மையாக இருக்கும் நேரத்திற்காக நான் காத்திருந்தேன், அது என் கையில் கொடுக்கப்பட்டது, அது இருந்தபடியே, ஒரு பட்டயம், மேலும் அதைக் கொண்டு மக்களின் இருதயத்திலுள்ள அதே எண்ணங்களை அது பகுத்தறியும். நான் நினைத்தேன், "அது எப்படி இருக்க முடியும்?" நான் அதை நம்பி, காத்திருந்தேன், அது நடந்தது. பரியாசக்காரர், அவிசுவாசி, சந்தேகப்படுபவர், பொறுமையற்றவர், இன்

அவர்கள் "வார்த்தைக்கு விசுவாசத்தைத் திரும்ப நிலைநாட்டுவார்கள்," அதிலிருந்து அவர்கள் சிதறடிக்கப்பட்டிருந்தார்கள். அது சம்பவிக்க வேண்டும் என்று எனக்குத் தெரிந்திருந்தது, மேலும் நான் வார்த்தைக்கு உண்மையாக இருந்தேன். இயேசு கிறிஸ்து, இன்று, "நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராக" இருப்பதை நான் காண்கிறேன்.

சபை மக்களே, மழை பெய்கிறது. நான் இங்கேயே நிறுத்திக்கொள்கிறேன்.

*114* நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். நான் இந்தச் சாட்சிகள் அனைவரையும் கொண்டு வந்திருக்கிறேன்; என்னுடைய சொந்த சாட்சி. இந்த வாரத்தில், உங்களில் அநேகர் சாட்சிகளாக இருக்கிறீர்கள். அந்தக் காரியம் உண்மை, அந்தச் செய்தி. நான் எப்படி முடியும்...

*115* டாக்டர் டேவிஸ் என்னிடம் சொன்னார், "ஒரு பையன், ஒரு ஆரம்பப் பள்ளி கல்வி, ராஜாக்களுக்கும் அதிகாரம் உள்ளவர்களுக்கும் ஜெபிக்கப் போகிறானா,



பார்க்கிறீர்கள், அரசு தரப்பு வழக்கறிஞர் தனது சாட்சிகளான திரு. அவிசுவாசம், திரு. சந்தேகம் மற்றும் திரு. பொறுமையின்மை ஆகியோரை அழைத்தார்.

இப்போது தற்காப்பு சாட்சிக்குத் தனது சாட்சிகளில் ஒருவரை அழைக்க உரிமை இருக்கிறது. பரிசுத்த ஆவியானவருக்கு அதை அழைக்க உரிமை இருக்கிறது, ஏனென்றால் அவரே தேவனுடைய வார்த்தையின் தற்காப்பு சாட்சி.

*73* இப்போது, இந்த மனிதர்கள் தாங்கள் விசுவாசிப்பதாகக் கோருகிறார்கள், ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது, மேலும் அதை உயிர்ப்பிக்க முடிகிறவர் அவர் ஒருவர் மட்டுமே. இது இங்கே உங்கள் சரீரத்தைப் போன்றது, பாருங்கள்,

ஆவி இல்லாமல் உங்கள் சரீரம் செத்ததாயிருக்கிறது, அதுபோலவே அதை உயிர்ப்பிக்கிற பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் தேவனுடைய வார்த்தையும்

செத்ததாயிருக்கிறது. ஆவி சரீரத்தை உயிர்ப் பிக்கிறது, பரிசுத்த ஆவியானவர் வார்த் தையை உயிர்ப்பிக்கிறார். உங்களுக்குப் புரிகிறதா? இப்போது, அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

74 இப்போது அவர் முதல் சாட்சியை அழைக்கப் போகிறார். அவர் யாரை அழைக்கப் போகிறார் என்று பார்ப்போம். நோவா, அவர் நோவாவை அழைக்கப் போகிறார்.

75 நோவா சொன்னார், "நான் வாழ்ந்த நாட்கள் ஒரு அறிவியல் காலம்," இந்த நாளில் இருப்பதை விட மிகவும் புத்தி சாலித்தனமானது. "மேலும் வானத்திலிருந்து மழை பெய்யப் போகிறது என்று கர்த்தராகிய தேவன் என்னிடம் சொன்னார்."

76 பூமியின் மேல் மழை பெய்ததே இல்லை என்பது உங்களுக்கு நினைவி ருக்கும். மேலும் அங்கே மேலே மழை இல்லை என்பதை அவர்களால் கருவிகளைக் கொண்டு நிரூபிக்க முடிந்தது. நினைவில்



விதமான கனவைக் கண்டாய்? ஏன், நீ பார்க்கவில்லை என்பது உனக்குத் தெரியும்..."

நான் சொன்னேன், "நூற்றுக்கணக்கானோர் அங்கே நின்று, அதற்குச் சாட்சியாக இருந்தார்கள்."

112 மேலும் அவர்கள் கீழே வந்து, சொன்னார்கள், "ஓ, அது ஒரு மனக் கோளாறு." தன்னால் முடிந்தவரை முயற்சி செய்கிறான், அது அந்தக் கிழவன் அவிசுவாசம் மற்றும் திரு. சந்தேகம்.

113 நான் வார்த்தையை நேராகப் பற்றிக் கொண்டேன். அங்கே தங்கினேன், ஏனென்றால் அது தேவனுடைய வாக்குத் தத்தம் என்று எனக்குத் தெரிந்திருந்தது. ஆமென். லூக்கா 17-ம் அதிகாரம், அவர் வாக்குத்தத்தம் பண்ணினார், "சோதோம் நாட்களில் இருந்தது போலவே." உலகம் குவிந்து கிடப்பதை நான் கண்டபோது, அது இருந்தபடியே, ஏதோ ஒன்று சம்பவிக்க வேண்டும் என்று எனக்குத் தெரிந்திருந்தது. மல்கியா 4-ல் நான் கண்டேன், அங்கே

இடத்திற்கு இறங்கி வந்தது, மேலும் அந்தச் சத்தம் சொன்னது, "யோவான் ஸ்நானகன் அனுப்பப்பட்டது போல, மற்றும் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக இருக்க, உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும்."

*110* செய்தித்தாள்கள் அதை வெளியிட்டன, மேலும் அது அசோசியேட்டட் பிரஸ் மூலமாக கனடாவுக்குள்ளும், உலகம் முழுவதும் பரவியது, "ஒரு உள்ளூர் போதகர், பாப்டிஸ்ட் போதகர், ஞானஸ்நானம் கொடுக்கிறார், மற்றும்," சொன்னது, "ஒரு மர்மமான ஒளி அவருக்கு மேல் தோன்றுகிறது." ஜெர்மனியிலும் மற்றும்-மேலும் எல்லா இடங்களிலும் அவர்கள் எதன் படத்தை எடுத்தார்களோ, அதே நபர் தான். மேலும் அது முடிந்தது.

*111* என் போதகர் என்னிடம் சொன்னார், அவர் சொன்னார், "பில்லி, நீ என்ன



கொள்ளுங்கள், அந்நாட்களில் மழை பெய்ததே இல்லை. தேவன் நீர்ப்பாசனம் மூலம் பூமிக்குத் தண்ணீர் பாய்ச்சினார்.

77 ஆனால் அவர் சொன்னார், "மழை பெய்யப் போகிறது, உலகத்தை அழிக்கப் போகிறது. பூமி முழுவதும் ஒரு பெரிய வெள்ளம் வரப்போகிறது, அது அதை மூடி அழித்துவிடும்." அவர் சொன்னார், "இருந்தாலும், ஒரு பேழையைக் கட்டும்படி நான் தேவனிடமிருந்து உத்தரவு பெற்றேன்.

நான் இந்தப் பேழையின் வேலையில் இறங்கினேன், அறிவியலுக்கு அதைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது என்பதைப் பொருட்படுத்தாமல், தேவன் சொன்னது சத்தியம் என்று நான் நம்பினேன் என்பதை, என் விசுவாசத்தைக் காண்பித்தேன்."

அவர் ஒரு நல்ல சாட்சியை உருவாக்குகிறார் என்று நான் நினைக்கிறேன், நீங்கள் அப்படி நினைக்கவில்லையா? "மேலும் வேறு யாரும் அதைப் பற்றி என்ன

சொன்னாலும் பரவாயில்லை, மழை பெய்யப் போகிறது என்று தேவன் சொன்னார்; எனவே அங்கே மேலே மழை இருந்ததே இல்லை என்றாலும், அவரால் அங்கே மழையை வைக்க முடியும். அதற்காக ஆயத்தம் செய்யும் விதமாக, நான் எப்படியும் பேழையைக் கட்டுவேன்.

*78* "இருந்தாலும், சற்று நேரத்திற்கு முன்பு இங்கே சாட்சிக் கூண்டில் இருந்த அந்த நபர், திரு. அவிசுவாசி, என்னிடம் இருந்தார், அவர் என்னை எல்லா நேரத்திலும் பரியாசம் பண்ணினார். அவர் என்னைக் கேலி செய்தார். மேலும் நான் திரு. சந்தேகத்தைப் பார்த்தேன்; அவர் வந்து என்னைப் பார்த்துச் சிரித்தார்.

திரு. பொறுமையின்மை, அவர்கள் அனைவரும், அத்தகைய ஒரு அற்புதத்தை நம்புவதற்காக என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். ஆனால், நான் காத்திருந்தேன். நான் பேழையை முடித்தபோது, மழை வரவே இல்லை. அது வருவதற்கு முன்பு,



செய்த காரியம்? மேலும் அதைத்தான் அவர் வாக்குத்தத்தம் பண்ணினார், கடைசி நாட்களில் அது மீண்டும் நடக்கும் என்று அவர் சொன்னார்." நான் நினைத்தேன், "சரி, அது என்னவாக இருக்க முடியும்?"

*108* அவர் சொன்னார், "சரி, அது கர்த்தராகிய இயேசுவின் ஆவி. அவரே வார்த்தையாக இருக்கிறார். மேலும் கடைசி நாட்களில் இதை அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். இப்போது பயப்படாதே."

*109* பின்னர் நான் ஆற்றில் ஒரு கூட்ட மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சென்றேன். நான் அங்கே ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தபோது, சுமார் ஐயாயிரம் பேர் கரையில் நின்று கொண்டி ருந்தார்கள், அது பகலின் நடுப்பகுதி, மதியம் இரண்டு மணி, வெப்பம், ஓரிரு வாரங்களாக மழை பெய்யவில்லை, கரையில் நின்று கொண்டிருந்தார்கள், இங்கே காற்றிலிருந்து சுழன்று கொண்டு அந்த அக்கினி ஸ்தம்பம் வந்தது, நான் நின்று கொண்டிருந்த

*106* அவர் சொன்னார், "அங்கே முன்பு எப்படி இருந்ததோ, இப்போதும் அப்படியே இருக்கிறது. அவர்கள் தங்கள் மேலங்கிகளில் என்ன வகையான பொத்தான்களை அணிய வேண்டும், மற்றும் அது போன்ற காரியங்களைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தபோது, மேலும் பவுலும் அவர்களும் உலகத்தைத் தலைகீழாக மாற்றுகிறார்கள் என்று போதகர்கள் சொல்லிக் கொண்டிருந்தபோது, அது என்னவாக இருந்தது?

ஆனால் அது ஒரு பொல்லாத ஆவியாக இருந்தது, அது, 'இந்த மனிதர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள், இவர்கள் உலகத்தைத் தலைகீழாக மாற்றுகிறார்கள்,' என்று சொன்னது, பவுலையும் அவர்களையும் குறித்து." சொன்னார், "அவர்கள் தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்கள் என்று அந்தப் பொல்லாத ஆவி சாட்சியளித்தது."

*107* அவர் என்னிடம் சொன்னார், சொன்னார், "வேதவசனங்களில் உனக்கு நினைவில்லையா, அதுதான் நம் ஆண்டவர்



நான் நூற்று இருபது ஆண்டுகள் காத்திருந்தேன், ஆனால் அது வந்தது." ஆமென்.

*79* "அமருங்கள், சாட்சியே. அது ஒரு நல்ல சாட்சியம். நாம் மற்றொன்றை அழைப்போம், சாட்சி எண் இரண்டு. ஆபிரகாம், அவரைக் கொண்டு வாருங்கள்." நாம் அவரைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்தோம்.

*80* "மேலும்," அவர் சொன்னார், "எனக்கு எழுபத்தைந்து வயதாக இருந்தபோது, எல்லாக் காரணங்களுக்கும் முற்றிலும் எதிரான ஒன்றைச் சொல்லும்படி தேவனுடைய வார்த்தையை நான் கேட்டேன். அது ஒரு அற்புதத்திற்கும் மேலான அற்புதமாக (super times super miracle) இருக்க வேண்டியிருந்தது.

அதாவது, எனக்கு அறுபத்தைந்து வயதான ஒரு மனைவி இருக்கப் போகிறாள், அவளுக்கு அறுபத்தைந்து வயதாக இருக்கும்போது எனக்கு ஒரு மகனைப்

பெற்றெடுக்கப் போகிறாள். நாங்கள் கீழே சென்று எல்லாவற்றையும் ஆயத்தம் செய்தோம், ஏனென்றால் தேவன் அப்படிச் சொன்னார். நாங்கள் அதை நம்பினோம்.

மேலும்... இந்தக் காரியங்கள் நடக்கப் போகின்றன என்று நான் என் நண்பர்கள் அனைவருக்கும் சொன்னேன்... இது நடந்தாக வேண்டும் ஏனென்றால் தேவன் அப்படிச் சொன்னார். நான் பொறுமையாகக் காத்திருந்தேன். முதல் மாதம் வந்தது, என் மனைவியிடம் அவள் எப்படி உணர்கிறாள் என்று கேட்டேன். 'எந்த மாற்றமும் இல்லை.' பரவாயில்லை, நான் எப்படியும் தேவனை நம்பினேன்.

*81* "அங்கே திரு. அவிசுவாசி, திரு. பரியாசக்காரர், திரு. சந்தேகம், மற்றும் அவர்கள் அனைவரும் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். எனக்குக் குழந்தைகள் இல்லாதபோது, அவர்கள் என்னைப் பரியாசம் பண்ணிச் சிரித்தார்கள், என்னை, 'ஜாதிகளின் தகப்பன்' என்று அழைத்தார்கள்.



நான் அங்கே நின்றேன், மேலும்-மேலும் அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். நான் சொன்னேன், "ஐயா, அந்தப் பரவ சங்கள் மற்றும் அது போன்ற காரியங்களின் காரணமாக நான் இங்கே இருக்கிறேன்."

*104* அவர் சொன்னார், "மூன்று காரியங்கள் நடக்கும். முதலாவதாக, மக்களைப் பிடிப்பதற்கு உன் கையை எடுப்பதன் மூலம் நீ அறிந்துகொள்வாய். பின்னர், அதற்குப் பிறகு அது சம்பவிக்கும், நீ உண்மையாக இருந்தால், அவர்களின் இருதயத்திலுள்ள மிக இரகசியமானதை நீ அறிந்துகொள்வாய்."

*105* மேலும் நான் சொன்னேன், "அதைப் பற்றிப் பேசுவதற்குத் தான் நான் இங்கே இருக்கிறேன், நான் இருந்தேன்... அது பிசாசினுடையது என்று என் சகோதரர்கள் என்னிடம் சொன்னார்கள். நான் ஒரு கிறிஸ் தவன். நான் பிசாசினுடையதாக எதுவும் இருக்க விரும்பவில்லை."

அப்படிச் செய்தபோது, அது ஒரு மனிதராக இருந்தது. அவர் வெறுங்காலுடன் இருந்தார். அவருக்குத் தோள்கள் வரை முடி இருந்தது, மேலும் அவர் ஒரு அங்கி அணிந்திருந்தார். மேலும் அது எனக்கு மரண பயத்தை உண்டாக்கியது.

*102* அவர் சொன்னார், "பயப்படாதே. உன்னுடைய விசித்திரமான வாழ்க்கை, நீ இந்தக் காரியங்களிலிருந்து விலக முயற்சி செய்யாதே, அது உன்னுடைய அழைப்பு என்று உனக்குச் சொல்வதற்காகவும், கர்த்தராகிய தேவனின் சந்நிதானத்திலிருந்து நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

மேலும் வியாதிஸ்தர்களுக்காக ஜெபிப் பதற்கு, தேவன் உன்னை உலகெங்கிலும் உள்ள வெவ்வேறு இடங்களுக்கு அனுப் புவார். மேலும் நீ மக்களை நம்ப வைத்தால், மற்றும் உண்மையாக இருந்தால், அந்த ஜெபத்திற்கு முன்பாக எதுவும் நிற்காது."

*103* அது எனக்கு மரண பயத்தை உண்டாக்கியது. நிச்சயமாக, அது செய்தது.



*82* "மேலும் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு மாதமும் அது நடக்கும் என்று நான் நம்பிக்கொண்டே இருந்தேன். அவள் நேரம் செல்லச் செல்ல வயதாகிக்கொண்டே போனாள், ஆனால் அது... இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் தனது வார்த்தையை உண்மையாகக் காத்துக் கொண்டார். அது நடந்தது."

*83* "ஆபிரகாம், அது ஒரு நல்ல சாட்சி. எப்பொழுது என்று வார்த்தை ஒருபோதும் சொல்லவில்லை; அவர் செய்வேன் என்று சொன்னார். அவர் சொன்னார், 'நான் உனக்கு ஒரு குழந்தையை, ஒரு மகனை, சாராள் மூலமாகக் கொடுப்பேன்.' அடுத்த மாதம் என்று அல்ல; அடுத்த மாதம் என்று அவர் ஒருபோதும் சொல்லவில்லை.

அவர் செய்வேன் என்று சொன்னார்; எப்போது என்று சொல்லவில்லை. 'ஜெபம்...' 'அவர்கள் வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.' அதுதான் கருத்து.

'விசுவாசமுள்ள ஜெபம் நோயாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார்.'

'உன்னதத்திலிருந்து வரும் பலனால் நீங்கள் தரிப்பிக்கப்படும் வரை எருசலேம் நகரத்தில் காத்திருங்கள்.' ஒரு நாளைக்கோ, இரண்டு மணி நேரத்திற்கோ, பத்து நாட்களுக்கோ, பத்து ஆண்டுகளுக்கோ அல்ல. 'அந்த வல்லமை வரும் வரை!' இவர்கள் உண்மையான தற்காப்பு சாட்சிகள்!

"நமக்கு எப்போது குழந்தை பிறக்கும் என்று அவர் ஒருபோதும் சொல்லவில்லை," என்று ஆபிரகாம் சொன்னார், "ஆனால் நாம் பெற்றுக் கொள்வோம் என்று அவர் சொன்னார். எல்லா நேரத்திலும் முரண் பாடுகள் எனக்கு எதிராக வளர்ந்து கொண்டி ருந்தாலும், நான் உறுதியாக நின்றேன். ஏனென்றால், நான் மக்களின் அவிசு வாசத்தைக் கண்டு தள்ளாடவில்லை. நான் உறுதியாகப் பற்றிக்கொண்டேன்."

*84* "நன்று, ஆபிரகாம், அமருங்கள். இப்போது நாம் மற்றொரு சாட்சியை,



தொடர்பும் வைத்துக்கொள்ளாதே. அது பிசாசு. அது பிசாசு. நீ அதனுடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளாதே."

*101* ஒரு இரவு, நான் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு சிறிய முகாமில், மலைகளின் வெகு பின்புறத்தில், நான் அங்கே சாய்ந்து படுத்திருந்தேன். சுமார் அதிகாலை மூன்று மணியளவில், ஒரு ஒளி வருவதை நான் கண்டேன். நான் அப்போதுதான் வேதாகமத்தை வாசித்து முடித்திருந்தேன்.

யாரோ ஒருவர், ஒரு மரக்கட்டை துவாரத்தின் வழியாக, ஒரு லாந்தர் விளக்கு அல்லது அது போன்ற ஒன்றை ஒளிவீசச் செய்வதாக நான் நினைத்தேன். அது வெகு தொலைவில் உள்ள வனாந்தரத்தில் இருந்தது. மேலும் யாரோ மேலே வருவதாக நான் நினைத்தேன்.

அந்த ஒளி தரையில் இருந்தது; அது மென்மேலும் விரிவடைந்தது. யாரோ நடக்கும் சத்தத்தை நான் கேட்டேன்.

கொண்டிருந்தான்; அப்போது தேவன், தமது இறைமையில், இன்னும் தனது வார்த்தையைக் காத்துக்கொள்கிறவர், ஒரு சுழல் காற்றில் கீழே வந்து அங்கே நின்று, சொன்னார், "நீ இந்தக் காரியங்களைச் செய்யாதே." அவர் அதைச் சொன்னார்.

நான் ஒரு வாலிபனானபோது, ஒரு சிறிய பையனாக இருந்ததிலிருந்து, தரிசனங்கள் என் கண்களுக்கு முன்பாகத் தோன்ற ஆரம்பித்தன. அது என்னைப் பயமுறுத்தியது. நான் இரட்சிக்கப்பட்டேன், நான் ஒரு பாப்டிஸ்ட் சபையில் சேர்ந்தேன். நான் கேட்டேன்..

*100* இதுபோல நடப்பதைப் பற்றி என் பாப்டிஸ்ட் சகோதரர்களிடம் நான் சொன்னேன்... அதை என்னவென்று அழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை, ஒரு தரிசனம். நான் அதை ஒரு பரவசம் (trance) என்று அழைத்தேன்.

நான் போய் அதைப் பற்றி என் சகோதரர்களிடம் சொன்னேன். அவர்கள் சொன்னார்கள், "பில்லி, அதனுடன் எந்தத்



மூன்றாவது சாட்சியை அழைப்போம். மோசேயை மேலே கொண்டு வருவோம், அவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்."

*85* "இப்போது," அவர் சொன்னார், "நான் ஒரு விஞ்ஞானியாக இருந்தேன். அந்த வேலையில் தோல்வியடைந்த பிறகு, நான் நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் இருந்தேன். ஆனால் ஒரு நாள் நான் தேவனைச் சந்தித்தேன்.

வனாந்தரத்தில் இருந்த அந்தச் சத்தம், ஒரு அக்கினி ஸ்தம்பம், ஒரு வேதப் பூர்வமான சத்தம், நேரம் வந்துவிட்டது என்றும், அவர் தனது மக்களின் கூக்குரலைக் கேட்டார் என்றும், தனது வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்தார் என்றும், அவர்களை விடுவிக்க அவர் இறங்கி வருவதாகவும், அந்த வேலைக்காக அவர் என்னை அனுப்புவதாகவும் என்னிடம் சொன்னது.

*86* "நான் அவரிடம் ஒரு அடையாளம் கேட்டேன். அவர் எனக்கு ஒரு

அடையாளத்தைக் கொடுத்தார், மேலும் அவர் எனக்கு மற்றொரு அடையாளத்தைக் கொடுத்தார்; இரண்டு அடையாளங்களுக்கும் சத்தம் இருக்கும். அவர் சொன்னார்,

'ஒருவேளை அவர்கள் அந்த அடையா ளங்கள் எல்லாவற்றையும் நம்பவில்லை என்றால், கடலிலிருந்து (ocean) தண்ணீரை எடுத்துத் தரையில் ஊற்று, அது இரத்தமாக மாறும்.' அதுதான், அதுதான் எல்லாம். பார்வோன் அப்போதே முடிந்துபோனான். சொன்னார், 'ஒருவேளை, நீ... அவர்கள் அந்த அடையா ளங்களை, அந்தச் சத்தங்களை நம்பவில்லை என்றால்...'

*87* "இருப்பினும், தேவன் என்னிடம் சொன்னபடியே நான் கடமை தவறாமல் கீழே சென்றேன். யெகோவா, இருக்கிற வராகவே இருக்கிறவர் (I AM), இந்த அடையாளத்தைச் செய்யக் கீழே போகும்படி என்னிடம் சொன்னார். நான் இந்த அடையாளத்தைப் போதகர் பார்வோனுக்கு



தெரியும்? என் வாழ்வில் நான் ஒருபோதும் சபையில் இருந்ததில்லை.

அவர்கள் இருவரும் சபைக்கு வெளியே திருமணம் செய்து கொண்டார்கள், அதனால் அவர்கள் சும்மா... தாய் மற்றும் தந்தை, இருவரும், ஐரிஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள், அதனால் அவர்கள் சபைக்கு வெளியே திருமணம் செய்து கொண்டார்கள், எங்களுக்கு எந்த மதமும் இல்லை.

*98* நாங்கள் ஒரு நாய்களின் கூட்டத்தைப் போல வாழ்ந்தோம், சிறிய பழைய இழுவை வண்டி (pull-about) ஒன்றை வைத்தி ருந்தோம், முகாமிடுபவர்களைப் போல, தூணுக்குத் தூண், ஒரு மாதத்திற்கு மூன்று அல்லது நான்கு டாலர்களுக்கு வாடகை செலுத்தக்கூடிய ஒரு சிறிய குடிசையை எங்கே கண்டுபிடிக்க முடிந்ததோ அங்கே. நாங்கள் அப்படித்தான் வாழ்ந்தோம்.

*99* ஒரு நாள், ஒரு சிறிய பழைய வெறுங்காலுடனான பையன், ஒரு விஸ்கி ஆலைக்குத் (whiskey still) தண்ணீர் சுமந்து

கர்த்தருடைய அந்தத் தூதன் ஜன்னல் வழியாக உள்ளே வந்து நான் இருந்த தொட்டிலின் மேல் நின்றார் என்று. இன்று மதக் கலையின் அறிவியல் கூடங்களில் (scientific halls of the Art of Religion) அதன் புகைப்படம் அவர்களிடம் இருக்கிறது.

அது உலகம் முழுவதும் அறியப்பட்டது. இந்தக் காரியங்களைச் செய்வதாகத் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். ஒரு சிறு பையனாக, ஒரு சத்தம் என்னிடம் பேசி, சொன்னது, "ஒருபோதும் புகைபிடிக்கவோ, மெல்லவோ, அல்லது குடிக்கவோ வேண் டாம், எந்த விதத்திலும் உன் சரீரத்தைக் கறைப்படுத்தாதே. நீ வயதாகும்போது உனக்காகச் செய்ய வேண்டிய ஒரு வேலை இருக்கும்." நிச்சயமாக, அது என்னைப் பயமுறுத்தியது.

*97* மதத்தைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? என் மக்கள், முன்பு, கத்தோ லிக்கர்களாக இருந்தார்கள். இந்தக் காரியங்களைப் பற்றி எனக்கு எப்படி எதுவும்



முன்பாகக் கொண்டு சென்று, என் கோலைக் கீழே போட்டேன். உங்களுக்குத் தெரியுமா?

இது ஏதோ மந்திர வித்தை என்பது போல, அதைச் சந்தேகத்திற்குரியதாகக் காட்ட அவன் முயன்றான். மேலும் அதே காரியத்தைச் செய்வதற்காகவும், கேலி செய்வதற்காகவும் அவன் சில மாம்சரீகமான போலிகளை வெளியே கொண்டு வந்தான்.

ஆனால் அது தேவனுடைய வார்த்தை என்று எனக்குத் தெரியும், மேலும் நான் அந்தப் பிள்ளைகளை அங்கிருந்து வெளியே கொண்டுவர வந்திருந்தேன். என்ன நடந் தாலும் பரவாயில்லை, நான் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து நம்பினேன், அதனால் நான் அதனுடன் உறுதியாக நின்றேன்." ஆமென்!

*88* மோசே, நீங்கள் ஒரு உண்மையான சாட்சி! எதையும் வித்தியாசப்படுத்தாமல், அதைப் போலச் செய்ய முயன்று, மற்றும் எதையாவது முயன்று, பார்ப்பதற்கு அதைப் போலவே இருக்கச் செய்யுங்கள்; அவர் உறுதி

யாக நின்றார். மந்திரவாதிகள் வந்தார்கள். "பாருங்கள்," பார்வோன் சொன்னான், "பாருங்கள், இது ஏதோ மலிவான வித்தை.

இது பெல்சபூபு, ஏதோ மன தந்தி (mental telepathy) அல்லது அது போன்றது. என்னிடம் ஆட்கள் இருக்கிறார்கள், மந்திரவாதிகள், அதே காரியத்தைச் செய்ய முடியும்; குறிசொல்லுகிறவர்கள், அதைக் கேலி செய்ய, அது எதுவாக இருந்தாலும்." அது மோசேயை நிறுத்தவில்லை. அது கர்த்தருடைய வார்த்தையாக இருந்தது, ஏனென்றால் அதைத் தொடர்ந்து ஒரு வேதப்பூர்வமான அடையாளம் இருந்தது.

*89* "ஓ, ஆம்," சொன்னார், "திரு. அவிசுவாசம், திரு. சந்தேகம், மற்றும் அவர்கள் அனைவரும், என் தோள்களில் தொங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் நான் அந்த வார்த்தையுடன் நேராக நின்றேன், வார்த்தையைச் சொன்னவர் தேவன் என்றும், அதை அவரே பார்த்துக்கொள்வார் என்றும், அவர்கள் அல்ல என்றும் அறிந்திருந்தேன்.



அவருடைய அடுத்த சாட்சியாக இருக்க விரும்புகிறேன். அது மிகவும் தனிப்பட்ட விஷயமாக ஒலிக்கவில்லை என்றால், என்னை நானே அவருடைய சாட்சியாக முன்னிறுத்த விரும்புகிறேன். நான் அவருடைய சாட்சி. நான் அவருடைய அடுத்த, அவருடைய ஐந்தாவது சாட்சியாக இருக்க விரும்புகிறேன்.

*95* தேவன் எப்படி ஒரு முட்செடியை (cocklebur) எடுத்து அதிலிருந்து ஒரு கோதுமை மணியை உருவாக்க முடியும்? ஒரு பாவி, ஒரு பாவமான குடும்பத்திலிருந்து வந்தவன்; அவர்கள் அனைவரும் துப்பாக்கிகளுடனும், தங்கள் பூட்ஸ் அணிந்தபடியே (died with their boots on) இறந்தார்கள்; கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மற்றும் உங்களுக்குத் தெரிந்த இன்னும் பல. ஏன், அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

*96* இன்று மகிமையில் இருக்கிற என் தாய் சொன்னார்கள், நான் பிறந்த நேரத்தில்,

அவர் என்னை உயிரோடு வைத்தார், மற்றொரு சந்ததியை எழுப்பினார். நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, நாங்கள் தேசத்தைப் பிடித்துக்கொண்டோம். தேவன் அப்படிச் சொன்னார்!"

*93* மேலும், நினைவில் கொள்ளுங்கள், அவர்கள் இரண்டு நாட்கள் பயணத் தூரத்தில் மட்டுமே இருந்தார்கள். அவர்களின் அவிசுவாசத்தின் காரணமாக அவர் அவர் களை நாற்பது ஆண்டுகளாகத் தடுத்து வைத்தார். உங்கள் சுகம் ஐந்து நிமிடங்கள் தூரத்தில் இல்லாமல் இருக்கலாம்.

உங்கள் அவிசுவாசம் நீங்கள் உயிரோடு இருக்கும் வரை அதை உங்களிடமிருந்து விலக்கி வைக்கும். அதை நம்ப வேண்டும்! அவர் ஒரு உண்மையான சாட்சி, யோசுவா. ஆம், ஐயா. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் தேசத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

*94* நாம் அழைக்கக்கூடிய பல சாட்சிகள் நம்மிடம் இருக்கிறார்கள், ஆனால், நீங்கள் என்னை மன்னித்தீர்களானால், நான்



நான் அந்தப் பிள்ளைகளை வாக்குத்தத்த தேசத்திற்குக் கொண்டு செல்லப் போகிறேன் என்று அவர் என்னிடம் சொன்னார். நான் அவர்களை அங்கிருந்து வெளியே கொண்டு வரப் போகிறேன் என்றும், அது நடந்த இதே மலைக்கு நான் திரும்பி வரப் போகிறேன் என்றும் அவர் என்னிடம் சொன்னார். எப்படி என்று எனக்குத் தெரியவில்லை.

பார்வோன் என் உயிருக்கு மிரட்டல் விடுத்தான், மற்றும் எல்லாமே நடந்தது, ஆனால் நான் வாக்குத்தத்தத்திற்கு உண்மையாக இருந்தேன். கடைசியாக, தேவன் எதிரியை மேற் கொண்டார், நான் அவர்களைச் சிவந்த சமுத்திரத்தின் வழியாக, உலர்ந்த தரையில் வருவது போலக் கொண்டு வந்தேன்.

தேவன் தனது வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றினார், மேலும் நான் வருவேன் என்று அவர் என்னிடம் சொன்ன அதே மலைக்கு நான் நேராகத் திரும்பி வந்தேன்."

பாருங்கள், அது தேவன் என்று அவர் நம்பினார், அவர் உறுதியாக நின்றார்.

*90* நாம் நான்காவது சாட்சியை அழைப்போம், நாம் அவசரத்தில் இருப்பதால். நாம் நான்காவது சாட்சியாக, மோசேக்குப் பின் வந்த யோசுவாவை அழைப்போம்.

*91* யோசுவா சொன்னார், "நான் உளவாளி களுடன் அங்கே கீழே சென்றேன். நான் அனுப்பப்பட்டேன். நம்மில் பன்னிரண்டு பேர் அனுப்பப்பட்டோம்; ஒவ்வொரு சபைப் பிரிவிலிருந்தும் (denomination) ஒருவர்." மேலும் சொன்னார், "நாங்கள் அங்கே கீழே சென்று பார்த்தோம்.

இங்கே அவர்கள் திரும்பி வந்தார்கள், பயந்துபோய், சொன்னார்கள், 'சரி, அந்த மனிதர்களுக்கு முன்னால் நாங்கள் வெட்டுக்கிளிகளைப் போலத் தெரிகிறோம். ஓ, என் தேவனே, அவர்கள் நம்மை விடப் பெரியவர்கள்! அவர்கள் வலிமையான மனிதர்கள், அவர்கள் எப்படிப்பட்டவர்கள்!



நாங்கள் வெட்டுக் கிளிகளைப் போலத் தெரிகிறோம்.'

மேலும் சொன்னார், "காதேஸ்-பர்னேயாவில் நான் மக்களை அமைதிப் படுத்தி, சொன்னேன், 'ஒரு நிமிடம் இருங்கள். நீங்கள் ஒரு ராட்சதனையும் எதிர்ப்பையும் பார்க்கிறீர்கள். நான் தேவனு டைய வாக்குத்தத்தத்தைப் பார்க் கிறேன். தேவன் சொன்னார், "நான் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பேன்."' ஆமென். வார்த்தை அதை வாக்குத்தத்தம் செய்தி ருந்ததால், நான் மக்களை அமைதிப் படுத்தினேன்.

*92* "பிறகு, நாளுக்கு நாள், அவர்கள் சுற்றி வந்து, 'தேசம் எங்கே? பாலும் தேனும் எங்கே, யோசுவா? நீங்களும் அதை வாக்குத்தத்தம் செய்தீர்கள். அது எங்கே இருக்கிறது?' என்று கேட்பார்கள். 'தேவன் அதைப் பார்த்துக்கொள்வார்.' மேலும் அந்த அவிசுவாசிகள் அனைவரையும் இறக்கச் செய்தார்.